விவேக போதினி.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்

தொகுதி 1 } 1909-௵ பிப்ரவரி ௴ { பகுதி 8

ஸனாதனதர்மத்தின் கொள்கைகள்.

THE TENETS OF SANATHANA DHARMA

இதுவரையில் நமது மதத்தின் பிரிவுகள், சிறப்பு, நீடித்து நிற்கும் தன்மை முதலிய பொது விஷயங்களைப்பற்றிப் பேசியாய்விட்டது. இவைகளிலிருந்து நமது மதம் ஒரு சிறு மதம் அல்ல, அது உலகத்தில் காணப்படும் ஸகலமதங்களின் ஸாரபாகங்களை தன்னுள் அடக்கி உள்ளது என்பதும், நமது மதத்தை உள்ளவா றறிந்தால் உலகில் உள்ள ஸகல மதங்களையும் உள்ளபடி அறிந்ததாகும் என்பதும் நன்கு வெளியாகும். இப்படி இருப்பினும் இந்த மதக்களஞ்சியத்தை ஸனாதனதர்மம் என்று தனிப்பெயரிட்டு உலகத்திலிருக்கும் மற்றை மதங்களிலிருந்து வேறுபடுத்திக் கூற காரணம் யாது என்ற சங்கை பிறக்கலாம். இதற்கு ஸனாதனதர்மத்தின் சிறப்பு என்ற வியாஸத்தில் வேதாந்தத்தின் ஒழுங்குபடுத்தும் சக்தியைப்பற்றிக் கூறுங்கால் ஒருவாறு விடையளிக்கப்பட்டிருக்கிறது. நமது மதத்தை தனி மதம் என்று சொல்லுவதற்கு ஆதாரமாகியும், பிறமதங்களில் விசதமாகக் காணப்படாதனவாகியும், உள்ள சிறப்புக் கொள்கைகளை இங்கு எடுத்துச்சுருக்கமாக எழுதிப்பின்னர் வேதாந்த சாஸ்திரத்தில் ஸகல மதங்களுக்கும் பொதுவான கொள்கைகள் என்று தேடி எடுக்கப்பட்டனவான விஷயங்களைத் தொகுத்து எழுதுவோம்.

ஸனாதனதர்மத்திற்கே சிறப்பாகக் காணப்படும் கொள்கைகள் பின்வருவன:—

1. ஸனாதனதர்மத்தைப் பின்பற்றுவோர் யாவரும் வேதம் ஈசுவரனிடத்திலிருந்து வந்ததென்றும், மனிதனால் உண்டாக்கப்பட்டதல்லவென்றும், நம்புகிறார்கள். மனிதனுடைய நடவடிக்கைகளைப்பற்றியாவது, அவனுக்கும் ஈசுவரனுக்கும் உள்ள ஸம்பந்தத்தைப்பற்றியாவது, ஆத்ம ஸ்வரூபத்தைப்பற்றியாவது, நன்றாக அறியவேண்டுமானால் வேதத்தின் மூலமாகத்தான் அறியவேண்டும் வேதத்திற்கு அடுத்தபடியில் ஸ்மிருதி இருக்கிறது, கடைசியாய்த்தான் யுக்தி மூலமாய் அறியவேண்டும். வேதங்கள் ஈசுவரனிடமிருந்து வந்தனவென்றும், அவைகளைவிட உத்தமமானவை வேறொன்றும் இல்லை என்றும், நம்பாதவன் இம் மதத்தைப் பின்பற்றுபவனல்ல.

2. இதர மதங்கள், சிருஷ்டி கடவுளால் சூனியத்திலிருந்து திடீரென்று உண்டாக்கப்பட்ட செய்கை என்று சொல்லுகின்றன. நமது மதம், அவ்வாறன்றி கடவுள் தம்மிடத்து விதையுள் மரம்போல் ஸூக்ஷ்மமாய் அடங்கி மறைந்துகிடக்கும் பிரபஞ்சத்தைப் பலவிதமான ஸ்தூல ரூபமாய்த் தோன்றும்படி செய்வதே சிருஷ்டி, என்று சொல்லுகிறது.

3. நமது மதம் சாதுர் வர்ணங்களும் ஈசுவரனிடத்திருந்து வந்தனவே ஒழிய, மனிதனால் உண்டாக்கப்பட்டனவல்ல என்று சொல்லுகிறது.

4. கர்மவிதி என்றஒழுங்கை ஒப்புக்கொண்டு அதனால் முக்கியமாய் மனிதருள் தோன்றும்படியான, உயர்வு, தாழ்வு, ஸுக துக்கம்ஆகிய இவைபோன்ற துவந்துவங்களுள் காணப்படும் அனந்தபேதங்களுக்கு, யுக்திக்குப் பொருந்தும்படி நமது மதம் காரணமுரைக்கின்றது. நாம் செய்யும் கர்மம் ஒவ்வொன்றும், எண்ணும் எண்ணம் ஒவ்வொன்றும், இந்தப்பிறப்பிலாவது வேறு பிறப்பிலாவது அதற்குத் தகுந்த பலனைக் கொடுக்காமல் போகவேமாட்டாது என்பது தான் கர்மவிதியின் ஸ்வரூபம்.

5. கர்மங்கள் பந்தப்படுத்தும் ஸ்வபாவத்தை உடையன என்று ஒப்புக்கொண்டால் மறுபிறப்பு உண்டென்று ஒப்புக்கொள்ளவேண்டிவருகிறது. நமது ஆத்மா சுத்தமாய் மேலான நிலையை அடைவதற்குமுன் அநேக தேகம் தாங்கி அநேகம் தரம் பிறந்து இறந்து உலகில் அடிபடவேண்டுமென்பது மறுபிறப்பு உண்டு என்ற இந்த விதியின் ஸாரம். இந்த விதி கொஞ்சம் மாறுபட்ட ரூபத்தோடு புத்தமதத்திலும் சமணமதத்திலும் காணப்படுகிறது. ஆயினும் முன்சொன்ன மதங்கள் நமது மதத்தினிடத்திலிருந்து உண்டானவைகளாகையினாலேதான் ஸநாதன தர்மத்திற்கே இது சிறப்பாயுள்ளதென்று சொல்லப்பட்டது.

6. நமது மதம் பாஹ்ய சுத்தியானது மனத்தின் சுத்திக்குக்கொஞ்சம் ஸஹாயம் என்றுபோதித்து, ஒருவன் உயிரோடிருக்கும்வரையில் அவன் பாஹ்யமாய் அந்த சுத்திக்காகச் செய்ய வேண்டிய காரியங்களையும், அவன் இறந்த பின்பு அவன் ஆத்மா தடையில்லாது மேன்மை யடைவதற்காக அவன் உறவினர் செய்ய வேண்டிய பாஹ்யக்கிரியைகளையும், ஏற்படுத்தியிருக்கிறது. இக்கிரியைகளால் நமது மதம் தேகத்தை நிர்ப்பந்தப்படுத்தி ஒழுங்காக்கி மனது தடையில்லாமல் விருத்தியடைவதற்கு இடமுண்டாக்குகிறது. சிலமதங்களில் இதற்கு விரோதமான வழியே காணப்படுகின்றது.

7. திரிசரீரம்:—மனிதனுடைய ஸ்தூலதேகத்துள் வரவர அதிக நுட்பமான பஞ்சபூதஅணுக்களாலாகிய ஸூக்ஷ்ம சரீரமும் அதிஸூக்ஷ்ம சரீரமும் இருக்கின்றன வென்றும், அவைகள் எல்லாவற்றிலும் ஜீவாத்மா பரிணமித்து அவைகளை அடக்கியாளுகிறது என்றும், 'பிண்டத்திருப்பதுபோல் அண்டத்து' என்றபடி தோற்றும் ஸ்தூலப் பிரபஞ்சத்திலும் முன் சொன்னதுபோல் ஸூக்ஷ்மபாகங்கள் இருக்கின்றன வென்றும், இவைகள் யாவும் பிரளயகாலத்தில் (உலகம் தூங்குகிறது என்று சொல்லும்படியான நிலையில்) அதிஸூக்ஷ்மமாகக் கடவுளிடத்து லயித்து இருக்கின்றனவென்றும், நமது மதம் எடுத்துரைக்கிறது.

8. தேவாஸுரர்:—இப்பொழுது இருக்கும் மனிதனே ஈசுவர சிருஷ்டியில் மேலான சிருஷ்டி என்று இம்மதம் சொல்லாமல், மனிதனைவிட வரிசைக் கிரமமாய் நல்ல குணத்திலோ கெட்ட குணத்திலோ மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள் அவர் முறையே, ஸுரர், தேவர் அல்லது பிரகாசிப்பவர் என்றும், அஸுரர், ராக்ஷஸர் அல்லது இருளடைந்தவர் என்றும், பெயர் உடையவர்கள் என்று சொல்லுகிறது.

9. தேவர்களுக்குள் மேலானவர்கள் திரிமூர்த்திகளே. அவர்கள் ரஜோகுணப்பிரதானரான

பிரம்மா, ஸத்வகுணப்பிரதானரான விஷ்ணு, தமோகுணப்பிரதானரான ருத்திரர், ஆகிய இவர்களே. இவர்களுக்கு முறையே யீள்ள தொழில் ஆக்கலும், அளித்தலும், அழித்தலு மாம்.

10. கீழ்நிலையி லிருப்பவர்கள் மேல்நிலைக்கு எளிதில் வருவதற்கு நமது மதம் விக்கிரஹ ஆராதனையை விதிக்கிறது. ஆனல் இதை எல்லாரும் அவசியம் பின்பற்றவேண்டுமென்பது நமது மதத்தின் கருத்தன்று.

11. ஆத்மாவின் நிலயம்:—புல், பூண்டு, மிருகம், மனிதர் முதலிய ஸ்தாவர ஜங்கமங்கள் எல்லாவற்றிலும் ஆத்மா இருக்கிறது, அது அவைகளின் வழியாய் வரிசையாய் மேல்மேல் விருத்தியடைந்து மோக்ஷநிலையை அடைகிறது என்பது நமது மதத்தின் கொள்கை. ஆகையால் ஜீவகாருண்யம், கொன்றுதின்காமை ஆகிய நல்லொழுக்கங்கள் நமது மதத்தவரிடத்து பெரும்பாலும் காணப்படுகின்றன.

12. நமது மதத்தின்படி ஒருவன் எவ்வளவு கெட்டவனுய் இருந்தபோதிலும் அவனுக்கும் நித்ய நரகமென்பது கிடையாது. எல்லோருக்கும் காலக்கிரமத்தில் மோக்ஷம் உண்டென்பதே நமது மதத்தின் கொள்கை. புண்ய பாபங்களின் நிலைமைப்படி, ஒருவனுக்கு சிக்கிரமாயாவது தாமதமாயாவது மோக்ஷம் கிடைக்கும் என்பது நிச்சயம்.

13. அவதாரங்கள்:—எப்பொழுது தர்மமெல்லாம் குறைந்து அதர்மம் மேலிட்டுவிடுகிறதோ அப்பொழுது துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனத்தின் பொருட்டும், தர்மத்தை நிலைநிறுத்துதற்பொருட்டும் கடவுள் ஸ்வய இச்சையினலே அவதரிக்கிருர் என்று நமது மதம் உரைக்கின்றது.

14. ஒரு மதஸ்தர் தவிர மற்றைய ஹிந்துக்கள்எல்லோரும் ஜகத், ஜீவன், ஈசன் ஆகிய இவைகள் அநாதியாய் எக்காலத்திலும் இருப்பவைகள் என்று நம்புகிருர்கள். ஒரு மதஸ்தர் மாத்திரம் வியவஹாரநிசையில் இவைகளை எல்லாம் ஒப்புக்கொண்டு உண்மைநிலையில் கடவுளைத்தவிர வேறென்றுமில்லை கடவுள் ஒருவரே உண்மையில் இருப்பவர், ஜீவன் என்றும், ஜகத் என்றும் தோன்றுவனவெல்லாம் பிரமமேயொழிய உண்மையிலிருப்பவைகளல்ல என்றும் ஸித்தாந்தப்படுத்துகிருர்கள்.

15. தனது கொள்கைகளை நம்பினல் மாத்திரந்தான் மோக்ஷமென்று ஸனதனதர்மம் வற்புறுத்தவில்லை. வேதங்களும் சாஸ்திரங்களும்அனந்தம், ஆகையால்அவற்றுள் தனக்குத்தகுந்தஎந்த வழியின் மூலமாயும் மனிதன் மோக்ஷத்தையடையலாம் என்று நமதுமதம் எடுத்துரைக்கிறது. இதனல் நமது மதத்தில் மதத்துவேஷம் என்பது இருக்க இடமே இல்லை. இந்த உண்மையைக் கவனியாமல் மறந்தகாலத்தில்தான் மதத்துவேஷம் என்பது நம்மை வந்தடையும். மேலும் இதனல், ஒருவன் தனது மதத்தின் விஷயங்கள் ஒன்றும் தெரியாதிருக்குங்கால் திடீரென்று வேறு மதத்துக்குப்போவது, அநாவசியமென்பதும் பாபம் என்பதும் எளிதில் விளங்கும்.

சிறப்புக்கொள்கைகள் இவ்வாறுக, வேதாந்தத்தில் ஸர்வதஸம்மதமான கொள்கைகளாக ஆங்காங்கு காணப்படுபவைகளை இப்பொழுது எடுத்துத் தொகுத்துக் கூறுவோம். இவைகள் முன்கூறியுள்ள சிறப்புக்கொள்கைகளின் ஸாரங்கள் என்பது நன்குக விளங்கும். பொதுக் கொள்கைகள் பின்வருவன:—

1. தேகத்துக்கு அப்பாற் பட்டதாயும், நித்தியமாயுமுள்ள ஆத்மா ஒன்று உண்டு.

2. ஸம்ஸார துக்கத்தினின்று நீக்கி, உயர்ந்தஞானத்தையும் பேரின்பத்தையு மளிக்கும் கிருபாநிதியாகிய கடவுள் ஒருவர் உண்டு.

3. பாப கர்மங்களைவிலக்கி, அரிய புண்ணியங்களைச் செய்தலே மேன்மை அடைவதற்குத் தகுந்தவழி.

1908ம் வருடம்

4. இவ்வுலகத்திலுள்ள துக்கத்துக் கெல்லாம் ஆதிகாரணம் தேகாபிமானமும் ஸ்வயநயம் பாராட்டலும் ஆகிய இவைகளே யாதலால் இவைகளை வேரறுத்து ஸுகமடைவதே சிறந்த புருஷார்த்தம்.

5. அநித்தியமான தேகத்தின் அபிமானத்தை வெறுத்து அரியபதவியை அடைந்த மஹான்களை அறிந்தோ அறியாமலோ எல்லோரும் வணங்கி வழிபடவேண்டும்.

6. உத்தமமான பதவியொன்றுண்டு, அதை அடைந்தபின்னர் அடையவேண்டியதொன்றுமில்லை.

இக்கொள்கைகளை எல்லோரும் தடையின்றி அங்கீகரிப்பார்கள்.

இவைகளே நமது மதத்தினுள் காணப்படும் சில கொள்கைகள். இம்மாதிரியான சிறப்பையும், விரிவையும், பொதுத்தன்மையையும், உடைய நமது மதத்தை விநயத்தோடும், அன்போடும் நோக்கவேண்டும் என்பதை உணராதவராய், நம் மதத்து உட்பட்டவர்களும் புறப்பட்டவர்களுமாகிய அறைகுறையாய் அறிந்தசிலர் என் அஸந்தர்ப்பமாகவும், கலஹஹேதுவாகவும் குற்றங்கூறவேண்டும்? நண்பர்களே! இவ்வாறு விசித்திரமாயும், பலவிதமான பிரிவுகளால், உலகத்துள்ள மதங்களை எல்லாம் தன்னுள்ளடக்கும் திறனுடையதாயும், அவ்வுட்பிரிவுகள் நிலைபெற்றுப் பின்பற்றுவோர் பலருக்கும் உபயோகமாய் இருப்பதற்காக, வேண்டிய நுட்பமான யுக்திகளையும் வாதரூபமான சாஸ்திரங்களையும் உடையதாயும், உள்ள ஸநாதனதர்மமென்ற மதம், உம்மிடத்திருக்க, என் புத்திஹீனமாய், வீணாய் வெளியில் அலைந்து புதியமதங்களைத் தேடுகிறீர்கள்? உங்களைப் பார்த்தால் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைபவர்போ லிருக்கிறதே! இவ்வளவு அநுகூலமான மதத்தைவிட்டு வேறுமதத்துட்சென்றால், உங்களுக்குத் தகுந்த பாகம் அங்கு அகப்படாமல், அநியாயமாய்க் கஷ்டப்படுவீர்கள். ஆகையால் நமது மதத்தை நன்றாய் அறிந்து தெளிந்து உமக்குத் தகுந்த பாகத்தைப் பின்பற்றி, மற்றைய பாகங்களைப் பின்பற்றுபவரைக் கண்டு இகழாது உமது கருமத்திலே கண்ணாயிருந்து, காலக்கிரமத்தில் பரமபதமாகிய முத்திப்பேற்றை எளிதில் அடைவீர்களாக.

ஸ்ரீமான் பி. ஆர். ராஜம் அய்யர் அவர்கள்

B. R. RAJAM IYER AVERGAL B. A.

* நூன்றே ரிருப்பதுப்ரஸித்தமுற லரிதவர்
அபூர்வமாக் கண்டோமெனும்
அகமுறுர் குருவினருள் தெரிவிப்பதாமஃதி
அறைவரவர் புகல் நூலெல்லாம்
வான்றேபு மெய்ப்பொருள வாமவற் றுக்கியோன்
வனைபெய ரிராதவர்க்கு
வரைகர்மம் நோக்கின்று கடவுளிட மீடுபடல்
மற்றதாக் கினுமாக்குவர்
என்றே யதைச் செயினும் ஈசன்வழி பாடென்னும்
எண்ணமொடு செயவருலகுக்
கிவ்வுதவி செயகுத மெனுஞ் செருக் கொடு
செயார் இதனி னிவை போனுமுதவி
சான்றேய தொன்றுமில்லை உதவி செய
பேராவல் சார்ந்தவர்க ளாலுமிங்ஙன்
தட்டற்ற வுதவிசெய வொண்ணு திவாறு
மன்ற தகையர்மெய் யுதவியாரே.

இ. வை. அனந்தராம அய்யர்

* இறுதியைப்பார்க்க

III. பிரபுத்தபாரதச் சருக்கம்

THE PRABUDDHA BHARATA

உபதேசம் பெற்றதுமுதல் கொஞ்சகாலமாக ராஜம்அய்யர் ஸ்வாமிகளிடம்சென்றுஅரிய உண்மைகளை சிரவணம் செய்து பின்பு மனன நிதித்யாஸனாதிகள் மூலமாக நிஷ்டையில்தேர்ச்சிஅடைந்துகொண்டு வந்தார். மயிலாப்பூர் பிரபுக்களும் ராஜம் அய்யரும் சேர்ந்து மத விஷயங்களில் இவ்வாறு பாடுபட்டு வரும்நாளில் பிரபுக்களுக்கு ஓர்வித மனக்கிளர்ச்சி உண்டாயிற்று. ஸ்வாமிகள் வாரம் இரண்டுமுறை செய்யும் அரிய உபந்நியாஸ விஷயங்கள் கேட்டது கேட்டபடி இருந்தனவே ஒழியவேறில்லை. அவைகள் நீடித்து நிற்கும்படி எழுதப்பட்டால் உபந்யாஸம் கேட்டவர்களுக்கு ஞாபகக்குறியாகவும் மற்றவர்களுக்கு மிகுந்த உபகாரமாகவும் இருக்கும் என்று முன்னமேயே அவர்களுக்குத் தோன்றிக்கொண்டிருந்தது. மேலும்தமிழ் ஆங்கலம்முதலிய பாஷைகளில் விசேஷத் தேர்ச்சியும், அழகிய வியாஸங்கள் எழுதுவதில் விசேஷசக்தியும், மதவிஷயங்களில் விசேஷப்பற்றும் வாய்ந்த ராஜம் அய்யர்அவர்கள் ஸ்வாமிகளுக்கு சிஷ்யராக ஏற்பட்டதும் முற்கூறிய எண்ணம் பிரபுக்களுக்கு ஓர் மனக்கிளர்ச்சியாக எழ, அவர்களுக்கு ராஜம் அய்யரை பத்திராதிபராக வைத்துக்கொண்டு ஓர் மாதாந்த பத்திரிகை ஏற்படுத்தி, அதில் எளிய ஆங்கிலநடையில் நமது பாண்டித்யசாலையில் படிக்கும் சிறுவர்கள் எளிதில் உணரும்வண்ணம் ஸ்ரீமத் சாந்தானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் அழகாக வெளியிட்டுவரும் மத உண்மைகளை எழுதி பிரசுரம் செய்யவேண்டும் என்ற பரபரப்பு உண்டாயிற்று. அந்த ஸமயத்தில் அமெரிக்காவிலிருந்து திக்விஜயம் செய்து நம் மதமாம் ஸனாதனதர்மத்தை அங்கு நிலைநிறுத்தி அரிய விஷயங்களைச் செய்த விவேகானந்த ஸ்வாமிகள்வெகு கோலாஹலமாக மரியாதைகள் செய்யப்பட்டுபட்டணம் வந்துசேர்ந்தார். அமெரிக்காவிற்கு போகும்முன்னரே விவேசானந்த ஸ்வாமிகளுக்கும் பிரபுக்களுக்கும் நெருங்கிய பழக்கம் இருந்தது. ஆதலால் பிரபுக்கள் விவேகானந்தஸ்வாமிகளை அணுகி தாம் ஏற்படுத்தி நடத்தப்போகும்பத்திரிகையின் நோக்கம் முதலியவைகளைப் பற்றி விஸ்தாரமாகப்பேசி, அதற்கு அதிபராக இருந்து அதை நடத்தப்போகிற ராஜம் அய்யரையும் ஸ்வாமிகளின்முன் கொண்டு விட்டார்கள்.

விவேகானந்த ஸ்வாமிகளுக்கும் ராஜம் அய்யருக்கும் கொஞ்சநாழிகை நடந்த ஸம்பாஷணையில் ஸ்வாமிகளுக்கு இவருடைய ஆழ்ந்த அறிவு, நிலைபெற்ற மனஉருக்கம், அநுபூதி முதலிய யோக்யதாபாகங்கள் தெரியவந்தன. மதவிஷய பத்திரிகைகள் அநேகம் பரதகண்டத்தில் ஏற்பட்டு ஸனாதனதர்ம விஷயஞானத்தை அமெரிக்கா முதலிய வெளிதேசங்களில் பரவச்செய்து அதனால் தாம் செய்த திக்விஜயம் நிலைபெறவேண்டும் என்பது ஸ்வாமிகள் மனதில் ஸதா இருந்த எண்ணம். இதனாலேயே அமெரிக்காபோவதன் முன்னர் பிரம்ம வாதினி என்ற ஓர் பத்திரிகையை திருவல்லிக்கேணியில்அவர் ஏற்படுத்திவிட்டுப் போயிருந்தார். இப்பொழுது ஸகல குணங்களும் நிறைந்த ராஜம் அய்யர் ஆதிபத்யத்தின்கீழ் ஓர் பத்திரிகை ஏற்படப்போகிறது என்று கேட்டதும் ஸ்வாமிகளுக்கு அடங்கா ஆனந்தம் உண்டாய்விட்டது. உடனே கூடியசீக்கிரத்தில் தீர்க்காலோசனை செய்து, விழித்திக்கொண்ட இந்தியா என்ற பொருளையும், ஸனாதனதர்மத்திற்கும் புத்தமதத்திற்கும் உள்ள அந்நியோந்ய ஸம்பந்தத்தையும் குறிப்பிக்கும் பிரபுத்தபாரதம் என்ற பெயரையிட்டு ஓர் மாதாந்த பத்திரிகை ஏற்படுத்தலாம் என்று சொல்லி ஸ்வாமிகள் பிரபுக்களது எண்ணத்தை அங்கீகரித்தனர். இதுவும் அல்லாமல் பத்திரிகை நடத்தும் விஷயத்தில் பின்வரும் புத்திமதியையும் விவேகானந்த ஸ்வாமிகள் கூறியுள்ளார். "இப்பத்திரிகை நடத்துவதில் அதிக கல்வித்திறனைக் காட்டி பாஷை நடையை கடினமாகப் போக

விடாதிருக்கவேண்டும். இப்படிச் செய்தால் இது உலகெங்கும் எளிதில் பரவும் என்பதற்கு ஐயம் இல்லை. எளிய நடையில் எழுதினால் தான் உங்களுக்கு சீக்கிரத்தில் எடுத்த காரியம் கைகூடும். இதில் ஸநாதனதர்ம விஷயங்களை எளிய கதைகள்மூலமாக வெளியிடுவதே உங்கள் முக்கிய நோக்கமாக இருத்தல்வேண்டும். இம்மாதிரி கதைகள் ஸம்ஸ்கிருதபாஷையில் ஏராளமாகக் குவிந்து கிடக்கின்றன. அவைகளின் சிறப்பு அழகு முதலியவைகள் மிகுந்த அற்புதமாக இருக்கின்றன. அவைகளை நீங்கள் பலர் அறியச் செய்யவேண்டும். உங்கள் பத்திரிகையில் பொருள் எளிதில் விளங்காத நுட்பமான சாஸ்திர அல்லது வேதாந்த விஷயங்கள் அதிகமாக இருக்கக்கூடாது. தைரியமாகக்காரியத்தைநடத்துங்கள். சீக்கிரத்தில்உங்களுக்கு சிறப்பு வந்துவிடும் என்ற வீண்ஆசைக்குமாத்திரம் இடங்கொடாதேயுங்கள். நீங்கள் மனப்பூர்வமாகப் பாடுபட்டால்உலகம் நாளடைவில்உங்களை மதிக்கும்.'' இம்மாதிரி விவேகானந்தஸ்வாமிகள் தமது எண்ணத்தை அனுமோதித்தும் பிரபுக்களுக்கு எப்படியாவது கூடியசீக்கிரத்தில் பிரபுத்தபாரதத்தைத் தொடங்கிவிட வேண்டும் என்ற ஆவல் பிறந்தது.

முற்கூறிய ஆவலை மனத்தில் உடையவராய் பிரபுக்கள் சாந்தானந்த ஸ்வாமிகளை சுத்தமனதோடு அணுகி தமது அந்தரங்க நோக்கத்தை வெளிப்படுத்தினர். இது இவ்வாறுவதற்கு முன்னரே ராஜம் அய்யருக்கு வரவர நிஷ்டை பழகுவதில் ஓர்வித விருப்பும் உத்தியோகம் முதலிய லௌகிக விஷயங்களில் ஓர்வித வெறுப்பும் உண்டாகி விருத்தி அடைந்துகொண்டே வந்தன. சிற்சில ஸமயங்களில்உத்தியோகத்தை விட்டுத் தமது காலம் முழுவதையும் நிஷ்டை பழகிக் கழித்தால் நலமாக இருக்கும் என்றுபட, ராஜம் அய்யர் இந்த எண்ணத்தை வெளியிட்டிருந்தார். இது ஸ்வாமிகளுக்குத் தெரியவர, அவஸரப்பட்டு வேலையைவிடவேண்டியது அனவசியம் என்று சொல்லி ஸ்வாமிகள் ராஜம் அய்யரை அவர் மனம்போனபடி போக விடாமல் அடக்கி வந்தார். இப்படி இருக்கையில் பத்திரிகை விஷயத்தை ஸ்வாமிகள் பிரபுக்களால் அறிந்து, அதுவே ராஜம் அய்யருக்குத் தகுந்தவேலை என்று ஸந்தோஷித்து, பத்திரிகை ஏற்பட்டு பலப்பட்டால் வேலையை விட்டுவிடலாம் என்றும் ராஜம் அய்யருக்கு அனுமதிகொடுத்தார்.

இந்தத் தருணத்தில் தமது மனதின் நிலைமையை ராஜம் அய்யர் பிரபுத்தபாரதம் முதல் ஸஞ்சிகை முடிவில் எழுதியுள்ள பின்னோக்கில் ஆங்கலத்தில் தாமேவெளியிட்டிருக்கிறார். பின்வருவது அவர் எழுதியதின் மொழிபெயர்ப்பு. 'இப்பத்திரிகை ஆரம்பிக்குங்கால் உலகம் கரையேறும்படியான பேருதவி புரியவேண்டும் என்ற வீண் மனோராஜ்யம் எங்களிடம் குடிகொண்டிருக்கவில்லை. நாங்கள் கேட்டு ஆனந்திக்கும் விஷயங்கள் உலகில் சிறு பாலருக்காவது ஆனந்தம் விளைவிக்கலாம் என்பதும், இவ்விஷயங்களை உள்ளவாறு எழுதிவெளியிடுவதால் நாங்கள் கேட்ட விஷயங்கள்எங்களுள் வேரூன்ற நாம் மேன்மை அடைவோம் என்பதுமே எங்கள் முக்கிய எண்ணங்களாக விருந்தன. இப்பத்திரிகையைத் தொடங்கவேண்டும் என்ற எண்ணம் எங்களுக்குத் தற்செயலாக உண்டானது. இப்பத்திரிகை பின்னால் எந்நிலைக்கு வந்தாலும் ஸரி இந்த வேலையில் இறங்குங்கால் சுத்தமான மனதோடு தொடங்கக் கிருபைகூர்ந்த கடவுளுக்கு எக்காலத்தும் நாங்கள் நன்றி அறிதலுடையவர்களாய் இருப்போம். இது தொடங்கியகாலத்தில் எங்கள் மனதில் ரஜோகுண ஸம்பந்தமான ஸ்வசக்தியைப் பற்றிய கர்வமும் தமோகுண ஸம்பந்தமான உலகம் உய்யச் செய்யவேண்டும் என்ற பேராவலும் எங்களுக்கு உண்டாகவேயில்லை. இம்மாதிரியான ஸாத்வீக ஸமயத்தில் மிகுந்த குதூஹலத்துடன் எத்தகையவரிடமிருந்து அனுமதி பெறவேண்டுமோ அவரிடம் (சாந்தானந்த ஸ்வாமிகளிடம்) இருந்து அனுமதி

பெற்று அவர் அனுக்கிரஹத்தின்பேரில் வேலை தொடங்கினோம்.'

முற்கூறியபடி நல்ல தருணத்தில் தொடங்கிய பத்திரிகைக்கு ராஜம் அய்யரே முக்கிய பத்திராதிபதராகவும் வேறிருவர் ஸஹாய பத்திராதிபர்களாகவும் ஏற்படுத்தப்பட்டனர். உடனே இப்பத்திரிகைக்கு ஓர் முன் நோக்கு ஒன்று எழுதி இவர்கள் வெளியிட்டனர். ஆதியில் பரதகண்ட ரிஷிகளுக்கே தெளிவாகதோன்றிய அரிய விஷயங்கள் திரைகடலோடித் தூர தேசங்களில் பரவவேண்டும் என்றிருந்த கடவுள் கருத்தையும் அது ஸர்வ நடந்தேறுவதற்கு ஸஹாயமாக இருந்து உதவிய அநேக அதிசய ஸம்பவங்களையும், அவைகளால் தூர தேசங்களில் அநேகம் பேருக்கு ஸனாதன தர்ம ரகஸியங்களில் நம்பிக்கை ஏற்பட்டதையும் விவரித்துக் கூறப்பட்டிருந்தது. அதன் பின்பு இவ்வாறு தூரதேசத்தார் எல்லோரும் நமது மதத்தை ஆராய்ந்து ஆனந்திக்கையில் நம் தேசத்தில் அக்காலத்தில் படிக்கும் பிள்ளைகள் மத்தியில் நாஸ்திகமும் லோகாயதிக மதமும் குடிகொண்டு இருந்ததையும் அதை நீக்க பிரபுத்தபாரதம் என்ற ஓர் மாதாந்த பத்திரிகை தொடங்குவதாகவும் அது பிரம்மவாதினிக்கு ஸஹாயமாக இருந்து, வயது சென்றவர்களுக்கு பிரம்மவாதினி உபயோகப்படுவதுபோல பாண்டித்தியசாலைப் பிள்ளைக்குஇது உபயோகமாகும் என்பதாகவும், அதில் எழுதியிருந்தது. இதுவும் அல்லாமல் ஸனாதனதர்ம ரகஸியங்கள், அவைகளைவிளக்கும்புராணஇதிஹாஸகதைகள் தத்துவசாஸ்திரகதைகள் நூதன அற்புதகதைகள் பக்தர்கள் சரித்திரம் அவர்கள் பின்பற்றிய கொள்கைகள் ஆகிய இவைகள் அப்பத்திரிகையில் எளியநடையில் எழுதி வெளியிடப்படும் என்றும் அந்த முன்நோக்கில் பிரசுரம் செய்யப்பட்டது. இந்தமுன் நோக்கு பரவி முதல் ஸஞ்சிகை வெளியாகும் முன்னர் பகவத்கிருபையால் அப்பத்திரிகைக்கு 1500 சந்தாதார்கள் ஏற்பட்டனர்.

முதல் ஸஞ்சிகையில் 'வெளிவந்த ஸ்வகீயமே வாசிப்போர் மனதைக் கவரத்தக்கதாக விருந்தது. 'தூரதேசத்தில் உண்டான ஸனாதன தர்மவிஷய மனக்கிளர்ச்சியால் நமது பரத கண்டம் எழுப்பப்படுங்காலத்தில் அதை தெளியும்படிசெய்ய ஸஹாயமாக இப்பத்திரிகை இருக்கப்போகிறபடியாலும் முன் எழுதி வெளியிட்டு உள்ள முன்நோக்கின் மூலமாக பத்திரிகைக்கு வந்து குவிந்த சந்தாதார் கணக்கினாலும், இந்தப் பத்திரிகை நடைபெறவேண்டியது அவசியம்' என்பதை இதில் முதலில்காட்டியிருந்தது. மேலும் ஸனாதனதர்ம உண்மைகள் பரதகண்டம்விட்டு வெளியேரிய வழியைக் காட்டும் முகபடம் ஒன்றை இயற்றி அதை ஒவ்வொருஸஞ்சிகையின் அட்டை காகிதத்தில் அச்சிடப்பட்டுவந்தது. அதில் ரமணீயமான காட்டின் மத்தியில் ரிஷி ஒருவர் தமதுசிஷ்யர் இருவர்களுக்கும் அரிய உண்மைகளை உபதேசிப்பதை தற்செயலாகதூரத்திலிருந்து ஒரு துரையும் அவர் ஸ்திரீயும் கண்டு வியந்துகொண்டு அசையாது நிற்பதுபோலக் காட்டப்பட்டிருந்தது. அவ்வாறு கண்ட அவர்கள் மூலமாக ஸனாதன தர்மஅற்புதங்கள் வெளியூரில் பரவ அநேகர் பரதகண்டம் வந்து ஸனாதன தர்ம உண்மைகளை ஆராயத்தொடங்கினராம். சிலர் குற்றங்கூறப் புகுந்துசெய்த வேலைகளால் தமது எண்ணத்திற்கு விரோதமாக நமது மதரகஸியங்களைப் புகழவேண்டிவந்ததாம். இப்படி இருக்கையில் நமது மதத்தை ஓர் ஸந்யாஸி அமெரிக்கா சென்று ஸ்தாபிக்க இந்த அற்புத சங்கதியைக் கேட்டு நமது நாடு நமது மதத்தின் சிறப்பை ஒருவாறு உணர்ந்து விழித்துகொண்டதாம். அக்காலத்தில் நமதுநாட்டில் பாடசாலைகளில் படிப்போர் மனம் தெளிவதற்காக அந்த பத்திரிகை வெளிவந்ததாக ஸ்வகீயத்தில் கண்டிருந்தது. மேலும் முன்நோக்கில் கூறியபடி விஷயங்கள் பத்திரிகையில் அமைக்கப்பட்டுவரும் என்றும் ஒரு மதத்தையும் அதில் தூஷிக்காது எல்லாமதங்களை ஸமரஸப் படுத்தப்படும் என்

றும், வேதாந்த முடிவை எவ்வளவு எளிய நடையில் எடுத்துக்காட்ட முடியுமோ அவ்வளவு ஸரஸமாகக் காட்டப்படும் என்றும் அந்த ஸ்வகீயத்தில்வாக்களிக்கப்பட்டு இருந்தது. அதன் முடிவில் 'இந்தத்தொழில் உண்மையான பெரியோரது மனப்பூர்வஸஹாயம் இல்லாவிடில் தொடங்கியே இருக்கமாட்டாது. கடவுள் எங்கும் பரவிஇருக்கும் இவ்வுலகில் தொழில் செய்யவேண்டியது நமது பொறுப்பு. அதன் லாப நஷ்டங்களைப்பற்றி எண்ணமிடுவது நமது கடன் அல்ல. அவை அனுதராகி ஸர்வத்திக்கும் நாதரான ஜகன்னிவாஸராம் பரம்பொருளது பாரம்' என்று எழுதப்பட்டிருந்தது.

முற்கூறப்பட்டுள்ள வாக்குத் தத்தங்கள் யாவும்இப்பத்திரிகையில் பூர்த்திசெய்யப்பட்டன. பத்திராதிபர் நியாஸம் இருக்கவேண்டிய ஸ்தானத்தில் ஸநாதனதர்மத்தைப் பற்றியும்வேதாந்தவிஷயங்களைப் பற்றியும் உள்ளபொது நியாயஸங்களும், பத்திராதிபர் குறிப்பு இருக்கவேண்டிய இடத்தில் சிறு கதைகளும், மௌனியின் மனனம் என்ற சிறுவேதாந்த வாக்கியங்களும், பின்னர் வெளியிலிருந்து தானம் செய்யப்பட்ட இரண்டொரு விஷயங்களும், விஸ்தாரமாய் எழுதப் பட்டுள்ள இரண்டொரு புராணகதைகளும், பரம்பொருளைத் தேடிச் சென்றோர் என்ற பெயரின்கீழ் முறையாக பக்தர் சரித்திரங்களும், கீதா சாஸ்திர ஆராய்ச்சியும், ஆராதனை செய்யப்படும் விக்கிரஹங்களின் உட்பொருள்களும், வேதாந்த ஸாரபாகங்களும், வேதாந்த விஷம பாகங்களும் கமலாம்பாள் சரித்திரத்தைப்போன்றஉண்மை உயர்வு அல்லது வாஸுதேவ சாஸ்திரி என்ற அற்புதகதையையும், மேலும் வேதாந்த உட்பொருள் அமைந்து கிடக்கும் ஸாதாரணகதைகளும் வெகு அழகாகப் பத்திரிகை ஸஞ்சிகைகளில் அமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு ஸஞ்சிகையில் இரண்டொரு நியாஸங்களை தவிர மற்றைய எல்லாம் மறுபெயர் புனைந்து ராஜம் அய்யராலேயே நேரே எழுதி வெளியாக்கப்பட்டன. தாம் உபந்யஸித்துவந்த அரிய விஷயங்கள் எல்லாம் இந்த பத்திரிகையில் விடாது அழகாக அமைக்கப்பட்டிருந்ததைக் கண்டு இப்பத்திரிகையை அருள்வாக்கு என்று புகழ்ந்து மெச்சிக்கொண்டு சாந்தானந்தஸ்வாமிகளே வெகு ஆனந்தத்தோடு இதை மாதந்தோறும் விடாது தமது உபந்யாஸங்களுக்கு முன் வாசித்துவந்தனர். கடவுள் அருளால் முதல் வருஷம் முடிவிலேயே இப்பத்திரிகைக்கு 4500 சந்தாதார்கள் ஏற்பட்டனர். அதில் அநேகர் தாம் இதை ஒவ்வொருமாதமும் மிகுந்த ஆவலோடு எதிர்பார்ப்பதாகவும் கடிதம் எழுதி வந்தனர். இப்பத்திரிகையால் என்னைப்போன்ற அநேக பாடசாலைப் பிள்ளைகளுக்கு ஆதியில் ஸநாதன தர்மரகஸியங்கள் தெளிவாக விளங்கின. இப்பத்திரிகையால் ஞானம் உண்டாகி ஆனந்தம் அடைந்தவர் அநேகர் இருந்திருக்கவேண்டும்.

இவ்வளவு சிறப்போடுகூடிய பத்திரிகை எவ்வாறு நடத்தப்பட்டு வந்தது என்பதைப் பற்றிச் சற்றுக் கூறுவோம். ராஜம் அய்யர் தமது உத்தியோகத்தைவிட்டு நிஷ்டை பழகுவதும் ஸ்வாமிகள் உபந்யாஸங்களை மனம் ஊன்றிக் கேட்பதும், கேட்டவைகளை உள்ளபடி பத்திரிகையில் வெளியிடுவதும் ஆக ஸத்காலக்ஷேபம் செய்துவந்தார். பிரபுக்களைச் சேர்ந்தவர்கள் இரண்டொருவர் பத்திரிகையின் பணவிவரங்களையும், பொதுவேலைகளையும் ஸரிவரப்பார்த்து ராஜம் அய்யரைப் போஷித்து வந்தனர். பிரபுக்களின் பேராவலால் பத்திரிகை தவறாது ஒவ்வொரு மாதத்திலும் முதல் தேதியிலேயே வெளிவந்துகொண்டிருந்தது. பிரபுக்கள் வீட்டுக்குழந்தைகள்கூட மிகுந்த உத்ஸாகத்தோடு அன்றைக்குள்ளேயே 4000 பத்திரிகைகளையும் ஒட்டித் தபாலுக்குத்தயாராக்கினர். வழியில் போய் கொண்டிருந்த படித்த ஒவ்வொருவரும்இப்பத்திரிகை வேலைகளை தருமாகவே மேலே போட்டுக்கொண்டு தம்மாலியன்ற மட்டும் செய்துவந்தனர். இப்பத்திரிகை நடந்து

வந்த இரண்டு வருஷமும் பிரபுக்கள் வீட்டில் உத்ஸவம் பட்டபாடுபட்டது. பெரியவர்கள் சிறியவர்கள்எல்லோரும் ஒரேவிதமாக இப்பத்திரிகைவிஷயத்தில் ஆனந்தித்துத் தொழில்செய்து வந்தனர். இப்பத்திரிகை நடந்தகாலத்தில் அருகேயிருந்து ஆனந்திக்கக் கொடுத்துவைத்திருந்தவர்கள் எல்லோரும் தாம் அடைந்த ஆனந்தத்தை இன்னும் சொல்லி ஸந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வளவு கோலாஹலமாய் நடைபெற்று வந்த பத்திரிகை திடீரென்று இரண்டு வருஷத்திற்குப்பின் ராஜம் அய்யருக்குவந்த அகால மரணத்தால் தடைபட்டது. கடைசி ஸஞ்சிகையில் வெளிவந்த முடிவுறையில் 'இப்பத்திரிகை இதுகாரும் வேதாந்த ரகஸியங்களை எளிய நடையில் சிக்கர வெளியிட்டுக்கொண்டுவந்தது. உண்மையை உள்ளபடிவெளியிடவேண்டும் என்ற முக்கிய கருத்தோடு இப்பத்திரிகையைத் தொடங்கினோமே ஒழிய யாம் பணம் ஸம்பாதிக்கவேண்டும் என்று தொடங்கவில்லை. ஆதலால் இப்பொழுது பகவத்கிருபையால் எமக்கு பணவிஷயத்தில் யாதொரு குறைவும் இல்லாமல் இருந்தபோதிலும், எமக்கு முக்கியமாயிருந்தபத்திராதிபராகியராஜம்அய்யர்அவர்கள் இறந்துவிட்டபடியாலும், அவரைப்போல எம்முள் ஒருவராலும் வேதாந்தரகஸியங்களை உள்ளபடி வெளியிட்டு இந்தப் பத்திரிகையை நிலைபெறச் செய்யமுடியாதாகையாலும், உண்மையை வெளியிடும் நோக்கத்தை உத்தேசித்து நாம் இப்பத்திரிகையை நிறுத்திவிட எமது அன்புடைய சந்தாதாரிடம் அனுமதிகேட்டுக்கொள்ளுகிறோம்.' என்று வெளியிட்டிருந்தது. இந்த ஸஞ்சிகையில்தான் ராஜம் அய்யர் ஆதியில் பிரம்மவாதினியில் எழுதிவெளியிட்ட மனிதன் அவன் ஏற்றத்தாழ்வு என்ற வியாஸம் பத்திராதிபவியாஸஸ்தானத்தில் வெளிவந்தது.

ராஜம் அய்யர் இறந்தபின்பு, அவர், இப்பத்திரிகை, கமலாம்பாள் சரித்திரம் ஆகிய இவைகள் மூலமாக உலகிற்குச் செய்துவந்த உபகாரத்தை அனுபவித்தறிந்த ஒருவர் இவர் மரணத்தைப் பற்றி பரிதவித்து ஒருகவிதை ஆங்கிலத்தில் எழுதிவெளியிட்டனர். இக்கவிதை பின்னர் ஹிமாலயத்தில் பிரசுரம் செய்யப்பட்டு வெளிவந்துகொண்டிருந்த பிரபுத்தபாரதத் தொடர்ச்சியில்வெளிவந்தது. இன்னும் அந்தத் தொடர்ச்சி நடைபெற்றுவருகின்றது. இவர் இறந்து ஏழு எட்டு வருஷங்களுக்குப் பின் முற்கூறிய மைலாப்பூர் பிரபுக்களின் பிரயத்தனத்தின்பேரில் பிரபுத்தபாரதத்தில் இம்மஹான் பகவத்கிருபையால் அருள்வாக்குக்களாக வெளியிட்டவைகள் எல்லாம் ஒழுங்காகத் தொகுப்பட்டுவேதாந்த உல்லாஸம் என்ற பெயரோடு கூடிய ஓர் பெரியபுத்தகமாகவெளிவந்தது. இப்புத்தகவேலையில் யானும் சேர்ந்துஎன்னால் இயன்ற உதவியைப் புரிய பாக்கியம்பெற்றிருந்தேன். இப்புத்தகம் இப்பொழுதும் அநேகரால் மதிக்கப்பட்டு உயர்ந்த ஸ்திதியில் இருந்துகொண்டு அவர்களுக்கு ஆனந்தத்தை அளித்து வருகின்றது.

இவ்வாறு இரண்டு வருஷத்திற்குள் உலகில் எல்லோரும் வியக்கும்படி பரோபகாரம் புரிந்து பரமதம் அடைந்த ராஜம் அய்யரது இல்லற வாழ்க்கை முதலியவைகளைப் பற்றி அடுத்த ஸஞ்சிகையில் விவரிப்போம்.

---

* பொழிப்புரை:—

பெரியோர்கள் இருப்பது உலகப்பிரசித்தமாவது அபூர்வம். தாம் புதிதாகக்கூறுகிறோம் என்ற கர்வத்தோடு ஒரு உண்மையையும் இவர்கள் கூறார்கள், தமது குரு அநுக்கிரஹத்தாலேயே தாம் கூறுவதாக நம்பி இவர்கள் வெளியிடுவார்கள். ஆதலால் இவர்கள் செய்யும் நூல்கள் யாவும் மாறா உண்மைகளை உடையனவாக இருக்கும். அவைகளில் ஆக்கியோன் பெயர் காணப்படாது. கர்மங்கள் செய்யவேண்டும் என்பது இவர்கள் நோக்கம் அல்ல. கடவுளிடம் ஈடுபட்டு நிற்றலே இவர்களது வாழ்க்கைத்தொழில். ஸாதாரண ஸமயங்களில் இவர்கள் கர்மங்கள் செய்தாலும் செய்வார்கள். இவர்கள் தாம் செய்யும் கர்மங்கள் எல்லாவற்றையும் பகவத் ஆராதனையாகவே எண்ணிச்செய்வார்கள், லோகோபகாரம் என்ற செருக்குடன் செய்யார்கள். இவ்வாறு செய்யப்படுதலால் இவர்களது கர்மங்களைப்போல லோகோபகாரம் புரியக்கூடியவைகள் உலகில் ஒன்றும் இல்லை. உபகாரம் செய்யவேண்டும் என்ற பேராவலோடு மனப்பூர்வமாகக் கர்மங்களை செய்பவராலும்கூட பெரியோர்களைப் போன்ற மாறா உபகாரம் செய்யமுடியாது. இப்படி மறைந்தொழுகும் பெரியோர்களே உண்மையான பரோபகாரிகள்.

கும்பகோணம்

மஹாமக தீர்த்த விசேடம்

KUMBAKONAM: MAHAMAKAM FESTIVAL

—

சர்வ ஆன்ம கோடிகளையும் படைத்தும், அளித்தும் அழித்தும் திருவிளையாடல் இயற்றும் பரம்பொருளைப் 'பரமசிவம்' எனத் தமிழ் வேத நூல்களெல்லாம் முழங்காநிற்கும். இதனைப் 'பராபரனென் பதுதமது பேராக் கொண்டார்' என்னுந் தேவாரத்தினின்றும் 'தேவ தேவன் திருப்பெயராகவும்' என்னுந் திருவாசகத்தினின்றும் தெளிந்துணரலாகும். பரமசிவம் மக்களாகிய நாம் நமது புலன்களைப் புன்னெறியிற் போகவிடாது நன்னெறியிற் புகுவித்து எளிதில் உய்யுமாறு லிங்கரூபமாகத் திருக்கோயில் கொண்டுள்ளார். அங்ஙனந் திருக்கோயில் கொண்டுள்ள தலங்கள் இத்தென்னாட்டிற் பலவுள. அவைகளிலே இப்போதுள்ள தேவாரப் பதிகங்களை உடையனவாயிருக்கும் ஸ்தலங்கள் இருநூற்றெழுபத்து நான்கு. இவ்விருநூற்றெழுபத்து நான்கு ஸ்தலங்களில் சோழநாட்டில் மாத்திரம் நூற்றுத்தொண்ணூறு தலங்கள் இருக்கின்றன. இந்த நூற்றுத்தொண்ணூறு தலங்களுள் காவிரிக்குத் தென்கரையில் 127 தலங்களுள. இந்த 127 தலங்களுள் மிகப்பிரசித்திபெற்ற தலங்களுள் ஒன்று கும்பகோணம். கும்பகோணம் என்னும் புண்ணியபூமி மூர்த்தி விசேடம், தலவிசேடம், தீர்த்த விசேடம் என்னும் 3 விசேஷங்களையும் கொண்டுள்ள தலம். தேவாரம் பெற்ற மூன்று தலங்களைத் தன்னகத்தே கொண்டது. அவையாவன:— (1)குட மூக்கு (2) குடந்தைக் கீழ்க்கோட்டம் (3) குடந்தைக் காரோணம். இத்திருக்கோயில்களின் விசேஷங்களெல்லாம் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடிய திருக் குடந்தைப் புராணத்தில் விரிவாகக் காணலாகும்.

1 குடமூக்கு:—எமருஷி முதலியோர் பூசித்த ஸ்தலம். ஸ்வாமியின் திருநாமம் கும்பேசுரர். தேவியார் திருநாமம் மங்களநாயகி. ஞானசம்பந்த ஸ்வாமிகளாலும் அப்பர் ஸ்வாமிகளாலும் தேவாரம் பெற்றது. இத்தலத்தின் விசேடம் "குடமூக்கே குடமூக்கே என்பீராகிற் கொடுவினைகளைத் தீர்ந்தானைக் குறுகலாமே." என்னுந் தேவாரத்தால் இனிது பெறப்படும்.

2. குடந்தைக் கீழ்க் கோட்டம்.—இது நாகேசுர ஸ்வாமி கோயில் எனவழங்கும். அப்பர் ஸ்வாமிகளது தேவாரம்பெற்றுள்ளது. ஸ்வாமி பெயர் நாகேசுர ஸ்வாமி. தேவியார் பெரியநாயகி அம்மை. சூரியன் பூசித்த ஸ்தலம். இங்கே வருஷந்தோறும் சித்திரைமாதம் 11, 12, 13, இந்த தேதிகளிற் காலையிற் சூரிய கிரணம் சுவாமி மேற்படுகின்றது.

3. குடந்தைக் காரோணம். இது காசிவிசுவநாதர் கோயில் எனவழங்கும் ஞானசம்பந்த ஸ்வாமிகளது தேவாரம் பெற்றுள்ளது. இவ்வாலயம் மாமககுளத்தின் வடகரையிலிருக்கிறது. காயாரோகண ஸ்தலங்கள் மூன்றனுள் ஒன்று. உமையவள், மாந்தாதா முதலியோர் பூசித்த ஸ்தலம். ஸ்வாமிபெயர் (1) காசி விசுவநாதர் (2) சோமநாதர். தேவியார் பெயர்:— காசி விசாலாட்சி (2) தேனார் மொழியம்மை. குடந்தைக் காரோணம் என்னும் பெயர் வந்ததின் காரணம் பின்வருமாறு:—ஸ்ரீராமபிரான் சீதாபிராட்டியைக் கவர்ந்து சென்ற இராவணனைச் சம்ஹாரஞ் செய்ய ருத்திரகூறு தன்பால் இருத்தல் மிக அவசியமெனத் தேர்ந்து இத்தலத்து வாசஞ்செய்திருந்த அகத்திய முனிவரை வேண்ட முனிவரர் மாமகதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து விசுவேசரைத் தரிசித்தால் ருத்திரகூறு கிடைக்கும் என்றார். இதனை

" எல்லாத் தலங்களினும் ஏற்றம் விசுவேசம்
எல்லாத்தீர்த் தங்களினும் ஏற்றம் மகதீர்த்தம்
எல்லாமூர்த்திக்குமிகவேற்றமுள திம்மூர்த்தி
எல்லாக் கலையு மினிதுணர்ந்த மன்னவனே.
ஆதலி னித்தா னத்திவ்
வகிலநாயகரைச் சின்னாட்
காதலின் மக நீராடிக்

கனிதரப் பூசிப்பாயேல்
ஒதலி னளவா வன்மை
யுருத்திரன் கூறு பெற்று
மோதலின் வலிய னுகி
முன்னிய தடைவா யென்றான்'' என

வரும் குடந்தைப் புராணச் செய்யுள்களால் உணரலாகும்.

ஸ்ரீராமபிரானும் அவ்வாறே பூஜை செய்தார். விசுவேசர் எதிர் தோன்றினர். 'வேண்டுவதென்'? என வினவினர். 'அரக்கர் ஆவியை அழிப்பான் கருதினேன். உருத்திர கூறு என்னுடலத்துப் பொருந்துமாறு அருள் புரிதல் வேண்டும். எனச்சொற்றனர் ஸ்ரீராமபிரான். சிவபிரானும் 'நீ நமது சத்தியாகும். உன்னுள் நான் கலந்திருத்தல் பொருத்தமே' என்று சொல்லி ஸ்ரீராமரது காயத்துட் கலந்திருந்தார்.

"இராகவன் வதன நோக்கி
எம்பிரான் அருளிச்செய்வான்
பராவுகஞ் சத்தி நீகாண்;
பண்புசால் நின் காயத்தில்
விராவுதல் நமக்கு மிக்க
உரிமைகாண் எனவிளம்பிக்
காரசலங் காத்த அண்ணல்
மேனியுட் கலந்தீவர்ந்தான்."

காய + ஆரோகணம். "காயாரோகணமெனும் பேர் காரோணமென்றாயிற்று."

இந்தக் காரோண ஸ்தலத்துக்குத் தென்பாலுள்ள மாமக தீர்த்தத்தின் விசேடம் அளவுபடுந்தன்மைத்து அல்ல. அப்பர் ஸ்வாமிகளது தேவாரத்தில்

எவியிடர்க் கடலிடைப்பட் டுளக்கின்றேனை
யிப்பிறவி யறுத்தேற வாங்கி யாங்கே
கூவிமல ருலகனைத்து முருவிப்போகக்
குறியிலறு குணத்தாண்டு கொண்டார்போலும்
தாவி முதற் காவிரிநல் யமுனை கங்கை
சரச்சுதிபொற்றாமரைபுட் கரணிதெண்ணீர்க்
கோவியொடு குமரிவரு தீர்த்தஞ் சூழ்ந்த
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே,

என்னுந் திருத்தாண்டகத்தில் காவிரி, கங்கை முதலிய தீர்த்தங்களெல்லாம் ஒன்று சேரும் பெருமை வாய்ந்த தீர்த்த மகிமையை உடைய திவ்யஸ்தலம் குடந்தை என்று சொல்லப்பட்டிருக்கிறது. திருக்குறுந் தொகையிலும் "கங்கையாளவள் கன்னி யெனப்படும், கொங்கையாருரையுங் குடமூக்கிலே' என்றும், 'கோதாவிரியுறையுங் குடமூக்கிலே' என்றும், 'சாமியோடு சரச்சுவதியவள், கோமியும் முறையுங் குட மூக்கிலே' என்றுங் கூறப்பட்டுள. பன்னிரண்டு வருஷத்துக் கொருவிசை மாசி மகத்தின்போது காசிகங்கை தன்னிடத்து வரும் ஐதிஹ்பத்தால் இம் மாமகதீர்த்தத்துக்கும் அதிக சிறப்பு வாய்ந்தது.

அத்தகைய மகாமகம் நிகழும் கிலகஷு மாசி மகத்தன்று கொண்டாடப்படும். அன்றைய தினத்திற் கும்பகோணத்திலுள்ள ஜனக் கூட்டம் கணக்கிடமுடியாது. கும்பகோணத்துக்குப் போக முடியாவிட்டால் இருந்த இடத்திருந்து தியானஞ் செய்தாலும் பெரும்பலன் கிடைக்கும். மாமகதீர்த்தத்தின் மகிமையைக் குடந்தைப் புராணத்து 'மாமகதீர்த்தமகிமைப் படலம்" என்னும் பாகத்தில் விரிவாகக் காணலாகும். அப்படலத்தினின்று 2 செய்யுள்களை மாத்திரம் இங்கு எழுதி இச்சிறிய வியாசத்தை முடிக்கின்றேன்:—

1. உமையொரு பாகங் கொண்ட
உத்தமன் சொரூப மேயா
யமைதர செடுங்கா ரத்தே
யமர்ந்தனத் தெண்ணி னுலும்
இமைநொடி யளவிற் பாவம்
எனைத்தையும் இருப்பதாயொன்
சமைதரு மகதீர்த் தம்போற்
புவனத்துக் காண்ப தின்றே.

2. சந்ததி விழைந்தோன் ஐந்து
தரமக நாளின் மூழ்கி
னந்தலி லப்பே றெய்தி
நாடெலாம் புகழ வாழ்வான்
முந்தமா மகத்து மூழ்கின்
முழுச்சுடர் வகுவேற் செங்கைக்
கந்தவே ளனைய மைந்தற்
பெற்றுளங் களித்து வாழ்வான்.

வா. சு. செங்கல்வராயன், எம். ஏ.

கல்விச்சிறப்பு.

THE VALUE OF KNOWLEDGE

"கல்வியினூங்கில்லை சிற்றுயிர்க்குற்றதுணே."

இக்கல்விமாத்திரம் ஒருவனிட மிருக்குமெனின் "எக்குடிபிறப்பினும் யாவரேயாயினும் அக்குடியிற் கற்றோரை வருகவென்பார்." இவ் வித்தியாதன மிருப்பானொருவன் அரசனிலும் பதின்மடங்கு மதிகப்படுகிறான்.

"மன்னனுமாசறக் கற்றோனும் சீர்தூக்கில் [குத்
மன்னனிற்கற்றோன் சிறப்புடையன்—மன்னனுக்
தன்றேயமல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிடமெல்லாஞ் சிறப்பு."

இங்ஙனம் கல்வி பலமுடையானொருவனை அவன் குலமுதலியன நோக்காது மானிக்கவும் கூடுமோ? அவ்வாறு யாரேனும் கண்ணிய புருஷர்கள் செய்துளரோ என ஐய்புறல் வேண்டா; கணக்கற்ற திருஷ்டாந்திரங்களுள. அவைகளிற் சிலவற்றை அடியில் கவனிப்போம்.

க்ஷத்திரிய குலத்திற்பிறந்து, ஜனனமரணங்களில் உழலு மான்மகோடிகளின் துயரை நீப்பேனென்று, இராஜபதந்துறந்து; பெண்டு பிள்ளை, பண்டபதார்த்தங்களில்பற்றற்று, உண்ணல் உறங்கல் முதலியனவும் கைவிட்டு, பல பெருப்பெருத்த பிராமண தபோதனர்களிடஞ் சென்று அவர்களால் உபதேசிக்கப்பெற்று, அவர்களாசரணைகளை யெல்லாஞ் செய்தும் பயன்படாது போனதும், தம்முடைய சுவபுத்தியின் பலத்தினல் நிர்வாண மார்க்கத்தைக் கண்டுபிடித்த போதிசத்துவர்க்கு முதன் முதல் கிடைத்த சிஷ்யர்கள், இம்மகானுக்குபதேசித்த பிராமணேத்தமர்களே. இரண்டாம் வருணத்தாரேனும், புத்தருடைய பரிபக்குவநிலையைக் கண்டானந்தித்த இப்பூசுர்கள் எங்ஙனே தம் பிறப்பின் பெருமையை முன்னிட்டு இறுமாப்படைய வியலும்? பௌத்த மதந் தழுவினவர்களுக்கு வர்ணாசிரமம் பாராட்ட இடமில்லை, கல்விகேள்விகளே மதிப்புக்குக் காரணமா யிருந்தனவேயொழிய, பிறப்பு ஒன்றற்கும் பயன்படாது போயிற்று,

ஆளவந்தார் சிஷ்யர்களில் முக்கியமானவர்கள் ஐவர். அவர்களில்நால்வர் விப்பிரசிகாமணிகள், ஒருவர் சாதுர்வர்ணிக சூடாமணி. இவ்வைந்தாவர் பெயர் கஜேந்திரதாஸ ரென்பதாயினும், இவர் சாதாரணமாய் திருக்கச்சி நம்பியென்றே எல்லாராலும் பெயர் கூவப்படுவர். இவர் பூவிருந்தவல்லி க்ஷேத்திரத்தில் ஜனித்தவர். சிலர் இவரை வாணியசெட்டிகள் ஜாதியென்பார்கள். இதற்கேற்ப, பூவிருந்தவல்லியில் சில செட்டிமார்கள் குடிகள், தாம் திருக்கச்சிநம்பியின் வமிசத்தார் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். இச்சாதிவிஷய மெங்ஙனேயாயினும், பிரதமவர்ணத்தாரல்லரென்பது எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இவர், கச்சிப்பேரருளாளரிடத்து அந்தரங்க பக்தியுடையவர். வரதராஜஸ்தவம் என்னும் ஸ்தோத்திரம் செய்தவரும் இவரே. திருக்கச்சிநம்பிகளுக்கும், ஆளவந்தாரிடம் வேதாந்தம் கேட்டுவருங்காலத்தில் காஞ்சிமாநகரில் வதிந்து, யாதவப்பிரகாசரிடம் வேதாந்த காலக்ஷேபஞ் செய்து, இவர் மார்க்கம் தம் மனத்திற்குபிடியாது இவரைவிட்டுப்பிரிந்து, தாமே வேதாந்த சாஸ்திரத்தை ஆராய்ந்து கொண்டிருந்த ஸ்ரீராமானுஜர்க்கும் நன்புண்டாயிற்று. நாளடைவிலேயே இராமானுஜர் திருக்கச்சிநம்பிகளுடைய வித்யாபாராவாரத்தைக்கண்டு வியந்து ஒருநாள் தம்பிறப்பு முதலியன ஒராது, அச்சத் சூத்திரர்காலில் விழுந்து சேவித்தார். இதிலும், வித்யாதேவிக்குச் செய்யும் வழிபாடுகள் வேறுயாதென்று நினைக்கவும் முடியாது.

சகலாகமபண்டிதர் என்னும் உயர்ந்த பட்டப்பெயர்பெற்று இராஜபதவியி லுள்ளார்க்கு பாடஞ்சொல்லிவந்த ஒரு பெரியவர், தம் சிஷ்யராகிய களப்பாள ராஜர்க்குப்பிறந்து சைவாகமத்தில் அற்புதஞானம் படைத்த மெய்கண்டதேவர் என்னும் சிறுவரிடம் மெய்கண்ட சாஸ்திரம் கற்றுணர்ந்து தம் பழம்பெயரை நீத்து, அருணந்தி சிவாசாரியர் என்று பெயர்பூண்டு மெய்கண்டதேவர் சிஷ்யர்என்று மகிழ்ந்திருக்க

வில்லையோ? சகலாகமபண்டிதர் பிரதமவருணத்தார் வயோவிருத்தர், பெயருக்குத் தக்க பாண்டித்திய முடையவரெனினும், சாதுர்வர்ணத்தில், தம் முன்னர் ஜனித்த சிறு வயதினராகிய மெய்கண்டதேவரிடம் சாஸ்திராப்பியாசம் செய்தாரெனின், யார்தாம், "எக்குடி பிறப்பினும் யாவரேயாயினும் அக்குடியிற் கற்றோரை வருகவென்பார்" என்னும் ஆன்றோர்வாக்கை பெரிது மதியாதொழிவர்? இவையெல்லாம் கிடக்க.

வைணவ சமயத்தில் பற்றுடையராய், சப்த காதை என்னும் சிறு நூலை யியற்றிய விளாஞ்சோலைப் பிள்ளையின் சாத்திரமுணர்ந்தோர் மேற்கூறிய கூற்றின் பெருமை என்றென்றும் மறவார். விளாஞ்சோலை பிள்ளை சாதியில் புலையர்; மதத்தில் ஸ்ரீவைஷ்ணவர். பிள்ளை லோகாசார்யர் என்னும் பிரமசாரியருடைய சிஷ்யர். ஸ்ரீசைலேசர் அல்லது திருமலையாழ்வார் என்பவர்க்கு பரம அந்தரங்கஸ்தர். இம்மஹான் எங்ஙனம், அன்னதோர் பெருங்கல்வியைக் கற்றனரோ, எவ்வாறு வைணவத்தில் ஊக்கமடைந்தனரோ, இப்பொழுது நினைக்கவும் கூடவில்லை. இக்காலத்திலேயே புலையர், பிரமணப் பிள்ளைகள் செல்லும் பள்ளிக்கூடங்களில், சேர்க்கப்படுவதில்லை எனின், அக்காலத்து, விளாஞ்சோலைப் பிள்ளை கல்விகேள்விகளிற் தேர்ச்சியடைந்து, விசிஷ்டாத்துவைத தர்சனத்தின் சித்தாந்தங்களில் பயிர்ச்சிபெற எப்படி யியன்றதோ, யாமறிய வகையில்லை. இவர்பிள்ளை லோகாசாரியாருக்கு அந்தரங்கஸ்தர் என்பதினாலேயே, கல்விச்செல்வத்தை எங்குற்றாலும் கவலாதாரும் மதியாதாரும் ஒருவருமில்லை யென்பது பெறப்படுகிறது.

து. அ. கோபிநாதராவ், எம்.ஏ.

இயற்கை அற்புதங்கள்

WONDERS IN NATURE

IV. வெந்நீர் ஊற்றுக்கள்

BOILING SPRINGS

—

உலகில் சற்றேரக்குறைய எல்லாத் தேசங்களிலும் வெந்நீர் ஊற்றுக்கள் காணப்படுகின்றன. எரியும் எரிமலைகளைச் சுற்றி வெகுதூரம் வரையில் இவ்வூற்றுக்கள் ஏராளமாகக் காணப்படும். இங்கிலாந்து தேசத்தில் பாத் என்னும் இடம் ஹெக்ளா, விஸுவியஸ் ஆகிய எரிமலைகளிலிருந்து சற்றேரக்குறைய 1000 மைல் தூரத்தில் உள்ளபட்டணமான போதிலும் அதிலும் 120 டிகிரி உஷ்ணமுடைய வெந்நீர் ஊற்றுக்கள் காணப்படுகின்றன. இதுபோலவே ஜர்மனி,பிரான்ஸ்,ஸ்பெயின் முதலிய தேசங்களிலும் இவ்வூற்றுக்கள் காணப்படுகின்றன. நமது பரதகண்டத்திலும் ஓர் அக்கினிக்குளம் இருக்கின்றதாம். காசியாத்திரைபோகிறவர்கள் அதன்

அருகில் போய் சேர்ந்தால் அரிசி, காய்கறி, முதலியவைகளை துணியில் ஒரு சிறு மூட்டையாகக் கட்டி கொதிக்கும் அக்குளத்து நீருள் தோய்த்து சீக்கிரத்தில் சமயல் செய்துகொள்கிறார்களாம். இக்குளமும் ஓர் வெந்நீர் ஊற்றே ஒழிய வேறல்ல.

உலகில் காணப்படும் சிற்சில வெந்நீர் ஊற்றுக்களில் உற்பேதங்கள் அடிக்கடி உண்டாகின்றன. உற்பேதம் ஸம்பவிக்கும் வெந்நீர் ஊற்றுக்களுக்கு கக்கும் ஊற்றுக்கள் என்று பெயர். உலகில் மூன்றுவிடங்களில் இம்மாதிரியான கக்கும் ஊற்றுக்கள் காணப்படுகின்றன. அவையாவன—ஐரோப்பாவின் வடமேற்கில் உள்ள ஐஸ்லண்ட்தீவு, அமெரிக்காவில் கற்பாரை மலைகளிலிருக்கும் மஞ்சள்கல் மாகாணம், பஸிபிக் மஹா ஸமுத்திரத்திலிருக்கும் புதிய ஸீலண்ட் தீவு ஆகிய இவைகளே. இவைகளை முறையே பின்னர் வர்ணிப்போம்.

ஐஸ்லெண்டில் காணப்படும் கக்கும் ஊற்றுக்கள் பூமியின் உஷ்ணத்தின் அளவை ஒருவாறு காட்டுகின்றன. அங்குள்ள ஹெக்ளாவின் சுற்றுப்பிரதேசத்திலுள்ள இரண்டு சதுரமையில் பரப்பிலேயே இக்கக்கும் ஊற்றுக்கள்காணப்படுகின்றன. இந்தச் சிறு பரப்புள் சற்றேரக்குறைய நூறு இடக்குள் இருக்கின்றன. அவைகள்மூலமாக வெந்நீர் பீரிட்டு வெளிவந்து கொண்டிருக்கும். இப்பிளவுகள் சிறு இடக்கு முதல் 15 அடி உயரம் 56 அடி குறுக்களவுள்ள பெரியகக்கும் ஊற்றின் தடாகம்போன்ற வாய்வரை அநேக அளவுகளை உடையன. இவ்விடக்களிலிருந்து எரிமலைக்குழாய்களைப் போன்ற குழாய்கள் பூமியின் உட்பாகத்தை நோக்கிச் செல்கின்றன. உற்பேதமில்லாத ஸமயங்களில் இக்குழாய்கள் மூலமாக வெந்நீர் பிளவுகள் வாயிலிருக்கும் தடாகங்களில் வந்து அவைகளின் விளிம்புவழியாக சுற்றிலும் உள்ள ஸமபூமியில் வழிந்தோடும். உற்பேதம் உண்டாவதற்குச் சற்றுமுன் ஊற்றின் குழாயுள் இடிமுழக்கம் அல்லது பீரங்கி முழக்கம்போன்ற ஒலி ஒன்று கேட்கும். பிளவுகளில் இருக்கும் தடாகங்களில் உள்ளவெந்நீர் கொதிக்கத்தொடங்குகின்றது. கொஞ்சநாழிகைக்கு எல்லாம் குழாயின் வழியாக நீராவியோடுகலந்த வெந்நீர்சில அடிகள்உயரக் கிளம்புகின்றது. இவ்வாறு விட்டுவிட்டு சிறுகுழப்பங்கள் இரண்டொருநாள் நடந்ததன்பேரில் பெரிய முழக்கம் தொடங்குகின்றது. இந்த முழக்கம் அதிகரிக்க சுற்றுப் பிரதேசங்கள் நடுங்கத்தொடங்கும். இந்தக் குழப்பத்தின் முடிவில் நீர்ஆவியோடுகலந்த வெந்நீர் 150 அல்லது 200 அடி உயரம் கிளம்பி விழுகின்றது. இதன்பின்பு குழப்பம் குறைந்து மறுபடியும் படிப்படியாக அதிகரித்து மறுநாளும் இவ்வாறு ஒருதரம் நடக்கின்றது. இவ்வாறு இக்கக்கும் ஊற்றுகள் தொழிற்பட்டு வருகின்றன.

இப்பொழுது ஐஸ்லண்ட் ஊற்றுக்களைவிடச் சிறந்ததாகிய மஞ்சள்கல்மாஹாணத்தில் உள்ள கக்கும்ஊற்றுக்களைப்பற்றி விசாரிப்போம். இம்மாஹாணத்தில் காணப்படும் வெந்நீர் ஊற்றுக்களின் விசேஷத்தை உத்தேசித்து 65 மைல் நீளம், 55 மைல் அகலம் உள்ள பிரதேசத்தை பலர் சென்று ஸுகப்படக்கூடிய பொது ஸ்தலமாக ராஜாங்கத்தார் விட்டிருக்கிறார்கள். இந்தப் பரப்பில்சற்றேரக்குறைய 1500 ஊற்றுக்களிருக்கின்றன. உற்பேதம் உண்டாகும் காலம், வேகம், படியும் கனிகள், தண்ணீரின் வர்ணம் ஆகிய இவைகள் விஷயமாக அவைகளில் அநேக வைசித்திரியங்கள் காணப்படுகின்றன. படத்தில் காட்டப்பட்டிருக்கும் சிறந்த கக்கும் ஊற்று இங்குள்ள ஊற்றுகளில் மிகப் பெரிதாயும், விசித்திரமாயும் உள்ளது. இதன் வாயிலிருக்கும் தடாகம் 20 அடி வெளி உயரம், 25 அடி குறுக்களவு, உள் ஆழம் 100 அடி வரையிலும் உள்ளது. உற்பேத ஆரம்பத்தில் இந்த தடாகம் வெந்நீரால் நிறைகின்றது. உடனே அதிலிருந்து 500 அடி உயரம் நீராவி கிளம்பி ஓர் முழக்கம் கேட்கின்றது. இதோடு தொடர்ச்

சியாக வெந்நீர் 90 அடி உயரம் ஒரே அடியாகக் கிளம்ப அதன் உச்சியிலிருந்து தண்ணீர் ஐந்து சிறு பாகமாக மேலே பீரிட்டுக்கொண்டு கிளம்பி பூமியிலிருந்து 250 அடி உயருகின்றது. இத்தண்ணீர் கீழே விழும்பொழுது பூமி அதிருகின்றது, ஆகாயத்தில் அநேகம் ஆயிரம் சிறல் ஒலிகள் கேட்கின்றன, சிதரிவிழும் சிறு தண்ணீர்பாகங்களைச் சுற்றி வானவிற்கள் தவழ்ந்து அவைகளை சிறப்பிக்கின்றன. இவ்வாறு இக்கக்கும் ஊற்று 20 நிமிஷகாலம் உயர்ந்து ஆடிவிட்டு மெதுவாக தடாகத்தில் மூழ்கி மறைகின்றது. இவ்விடத்திலேயே விசிறி ஊற்று என்றொன்றுஇருக்கிறது. அதிலிருந்து தண்ணீர் ஐந்து பாகங்களாகப் பீரிட்டு கிளம்பி வெவ்வேறு பாகங்களில் 60 அடி வரையில் போய் சிறுதுளிகளாகசிதறிவிழுந்து பெரியவிசிரியைப்போன்ற தோற்றத்தை உண்டாக்குகின்றது. நம்பிக்கை ஊற்று என்று வேறொரு ஊற்று அங்கு இருக்கின்றதாம்; அதிலிருந்து தவறாது வெந்நீர் ஒரு மணிக்கு ஒருதரம் வெகு உயரம் கிளம்பி விழுகின்றதாம். அதிலிருந்து அருகாமையிலுள்ளோர் நாழிகைக்கணக்கை கடிகாரம் இன்றி எளிதில் தெரிந்துகொள்கின்றனராம். இம் மஞ்சள்கல் மாஹாணத்தில் சிற்சில இடங்களில் வெந்நீர் ஊற்றுக்கள் அவிந்துபோக காடுகள் விருத்தியாகி வருகின்றனவாம்.

இனி புதிய வீலண்டில் உள்ள ஊற்றுக்களை நோக்குவோம். ஐஸ்லண்டு தேசத்திய கக்கும் ஊற்றுக்களைப்போன்ற இரண்டொரு ஊற்றுக்கள் இங்கு காணப்படுகின்றனவாம். இங்குள்ளவைகளில் ஓராகி கோராகோ என்ற ஊற்று ஓர் பள்ளத்தாக்கில் உள்ள ஆற்றுள் இருபக்கங்களிலிருந்தும் வந்து விழுகின்றதாம். டேட்டராடா என்ற மற்றொரு ஊற்றில் மணல்ஸம்பந்தமான வஸ்துக்கள் அநேகம் வெளிவருகின்றனவாம். அவைகளால் தடாகத்தின் வெளிப்புறத்தில் …ாகங்களும் படிகளும் ஏற்பட்டிருக்கின்

இம்மாதிரி விசித்திரமாகக் காணப்படும் வெந்நீர் ஊற்றுகளின் காரணம் யாது என்ற கேள்விபிறக்கும். இதில் தண்ணீர் சுடுவதற்குத் தக்க காரணங்கள் நாம் கூறவேண்டும். முதலில் இவ்வூற்றுக்களின் பொது அமைப்பு நமக்கு ஒருவாறு உதவியாக இருக்கலாம். எரிமலைப் பிரதேசங்களிலாவது, எரிமலை இல்லாதவிடங்களில் மலைப்பிராஞ்சியத்தில் உயர்ந்தவிடங்களிலாவது, மத்திய பிரான்ஸைப்போன்ற அவிந்த எரிமலைப் பிராஞ்சியங்களில் உயர்ந்தவிடங்களிலாவது தான் இவ்வெந்நீர் ஊற்றுக்கள் காணப்படுகின்றன. இதனால் எரிமலைகளில் வெப்பம் உண்டாகும் காரணத்தாலாவது, மலைகள் உண்டாக ஏற்படும் நெருப்பால் உண்டாகும் உஷ்ணத்தாலாவது, அவிந்த எரிமலைகளுள் இருக்கும் அதிக உஷ்ணத்தாலாவது பூமியில் உள்ள தண்ணீரின் உஷ்ணம் அதிகமாக அது ஊற்றாக வெளிவருங்கால் வெந்நீராக வருகின்றது என்பது எளிதில் ஊகிக்கக் கூடிய விஷயம். அப்படி ஆயின் வெந்நீர் ஊற்றுக்களில் உற்பேதம் உண்டாகக் காரணம் யாது என்ற சங்கை பிறக்கலாம். இதற்கு ஐஸ்லண்டில் காணப்படும் கக்கும் ஊற்றுநீர் வெப்பத்தை உற்றுநோக்கில் எளிதில் பதில் கூறலாம். இந்தக் கக்கும் ஊற்றுக்களில் வெளிவரும் தண்ணீரின் அடிப்பாகத்தில் 261 டிகிரி உஷ்ணம் காணப்படுகின்றது. ஆனால் தண்ணீர் 212 டிகிரியில் ஆவியாக மாறிவிடும். பூமியுள்ளிருக்கும் அமுக்கலால் 261 டிகிரிவரையில் உஷ்ணம் எரியும் தண்ணீர் ஆவியாக மாறாதிருக்கிறது. ஆகவே பூமியுள்ளிருக்கும் தண்ணீர் இவ்வூற்றுக்களில் ஆவியாக மாறத்தருணம்பார்த்துக்கொண்டிருப்பதால் அதிக வேகத்தோடு கிளம்பும் சக்தியைதன்னுள் உடையதாக இருக்கின்றது. இப்படி இருக்கையில் ஊற்றின் வழியாக வெளியேபோக இடங்கிடைத்ததும் அதிகவேகத்தோடு தண்ணீர் கிளப்பப்பட்டு வெளிவருகின்றது. வெளிவந்த அமுக்கலிலிருந்து விடுபட்டதும் தண்ணீரின் சிலபாகம்

திடீரென்று ஆவியாகி வெந்நீரோடு வேகமாகக் கிளம்புகின்றது. இம்மாதிரி தண்ணீர் திடீரென்று ஆவியாக மாறுதலால்தான், பீரங்கி முழக்கம் அல்லது இடிமுழக்கம்போன்ற சப்தங்கள் வெந்நீர்ஊற்று உற்பேதங்களில் உண்டாகின்றன. ஆகவே வெந்நீர் ஊற்றுக்களும், கக்கும் ஊற்றுக்களும், உண்டாக இவைகளே காரணங்கள்.

இவைகளால்உண்டாகும்பிரயோசனம் யாது? எரிமலைகள் உண்டாகும் காரணத்தோடு இவைகளின் காரணம் ஸம்பந்தம் உடையதாக விருந்தபோதிலும் எரிமலைகளைவிட இவைகள் எவ்வளவோ ஸுகத்தை உண்டாக்குவன. இங்கிலாந்து முதலிய குளிர்ந்த தேசங்களில் இவைகள் ஸுகோஷ்ணமாக விருந்து மிகுந்த உபயோகமாகின்றன. மேலும் இவைகளில் அநேகம் நிலக்கனி வர்க்கங்கள் சேர்ந்து வருவதால் இவைகளில் ஸ்நானம் செய்வோருக்கு நல்ல தேக ஸௌக்கியம் உண்டாகின்றது. இதற்காகவே அநேகர் இத்தகைய விடங்களுக்குப் போய் ஸ்நாநாதிகள் செய்து கொஞ்சகாலம் அங்கேயே வாஸம் செய்வதும் உண்டு. இவைகளால் எரிமலைகள் முதலியவைகளைப்போன்ற நாசம் ஒரு நாளும் உண்டாகமாட்டா.

நீ செய்தொழிலை ஆசையுடன் செய்:— ஏதோ விதிவசத்தால் உனக்குப் பிடிக்காத வேலையை நீசெய்யும்படி நேரிடினும், அப்பொழுது அவ்வேலைபாற்குன் ஈசுவரன் உனக்கு ஆகாரம் அமைத்திருக்கிறபடியால் உன் மனதை முற்றிலும் வேலையிற்செலுத்தி அதையே உற்சாகத்துடன் செயயவேண்டும். அவ்வாறு நீ கொஞ்சநாள் பழகிவருவாயானால் உனக்குப்பிடிக்காத வேலையும் உன் மனதிற்கு ஒத்துவிடும். பழகப்பழக வேம்பும் கரும்பாம்.

இவ்வாறில்லாமல் அது பிடிக்கவில்லை இது பிடிக்கவில்லை என்று நீ ஒவ்வொன்றுயுந் தள்ளிவிடுவாயேயானால் நீ உலகத்தில் செயதொழிலைச் சரிபாகச்செயது சித்திபெறும் உயர்ந்த குணம் உன்னிடமற்றுப்போகும், ஏனெனில் உனக்கு ஒன்றும் பிடிக்காதன்றே?

நல்லியற்கையும் மனவுறுதியும்

ON GOOD NATURE AND FIRMNESS

கட்டியும் பாகுமாய்க் கசிந்துருகாதே; பச்சிலையைக் கிடம் மணம்பற்றி யரிப்பதுபோல் உலகமும் ஈரமுள்ளவரை யுன்னை யுறிந்து விடும். காடியாய்க் கடுத்தும் வழியாதே, உலகம் உன்னைத் துப்பித் தொலைக்கும். எதிலும் நடுத்தரம் உண்டு. மதியீனரே மட்டுமீறிச்செல்வர். இருந்தால் பாறையைப்போலும் இல்லாவிட்டால் மணலைப்போல் என்றிருக்க அவசியமில்லை. இரும்பைப்போல் உருக்குலையாமலிருக்கவும் மெழுகைப்போல் பிடிப்புக்கிசைய உருக்குலையவும் வேண்டுவதில்லை. வேடிக்கைக்கு வளர்க்கும் விளையாட்டு நாய்களைப்போல வந்துபோவோர்களிடமெல்லாம் கொஞ்சிக் குலாவித் திரியவும் வேண்டாம், வேட்டை நாய்களைப்போல் வெளியே போகிறவர்கள்மேலெல்லாம் எரிந்துவிழவும் வேண்டாம். உலகத்தில் கருமையும் வெண்மையும் கலந்தே நிலைபெறுதல்போல, மனப்போக்கிலும் வெவ்வேறுவகைகள் வெவ்வேறு மனிதரிடம்அமையப்பெறல் காண்கிறோம். சிலர் பழஞ் செருப்புப்போல் எவர்க்கும் மனதுக் கிசைந்தபடியெல்லாம் படிந்து செல்வர்; அப்படிச் செல்பவர்கள் பழஞ்செருப்பின் மதிப்பும் பெறார்கள். மற்றுஞ் சிலரோ, தொடும் முன் தீப்பறக்கும் தீக்குச்சிபோல் சிறுபிழையும் பொறுக்கல்லாராய் எரிந்துவிழுவர். வெறிகொண்டு தேளுக்கொட்டித் தீக்குவிளைக்கும் குரங்கைப்போல் எப்பொழுதும் கடுத்தமுகமும் கொதித்தமனமும் தடித்த சொல்லுமுள்ள வன்கணன் வேண்டாவிருந்தே யென்றாலும் அவன்பால் சிற்சில மானுஷீக குணங்க ளிருக்கச்செயயலாம். ஆனால் எடுப்பார் கைப்பிள்ளையாய், தனக்கென்று தனிமனமின்றி பிறர்மனமே தன்மனமாய்த் தடுமாறும் ஏழையோ, ஏனென்பார் யாருமற்ற வைக்கோர் வஸதியாவன். முதுகில் தண்டிருக்கவேண்டியது அதியவசியம்; இன்றேல் நிமிர்ந்து நிற்க வாய்க்காது. ஆயினும் அத்தண்டு வளைந்துகொடுக்கவும் வேண்டும், இல்லையேல் தலை தாக்குண்டு உடைபடுவது திண்ணம்.

பிறர் மனப்படி செய்யவேண்டிய தருணமும் உண்டு, செய்யவேண்டாக் காலங்களும் உண்டு. எப்பொழுதும் பிறர் இஷ்டப்பட்டபடி யெல்[...] நாம் செய்ந்த நீருவதென் றேற்பட்டால் யா[...] நம்மேற் குதிரையேறுவார்க [...]

முண்டோ? நம் மரியாதையை நாம் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால் நம்மை நாமேயடக்கியாள வேண்டுமேயொழிய பிறர் நம்மை யடக்கியாள இடங்கொடுத்தல் ஏற்காது. உலகத்தில் எவ்வெவரையும் களிப்பிக்கத் தலைப்பட்டால் நமக்கு மனோநிம்மதி யென்றைக்குமிராது. நல்லோர் பொல்லோரென்றுபாராமல் அண்டையிலுள்ளோர் யாவர்க்கும் தொண்டுசெய்வதே மணியமானால் நமது மதிப்புக் கெடுவதுமன்றி நமக்கே தீங்கும் விளைவித்துக்கொள்வது திண்ணம். பசுவைக் காணும்தோறும் புலி பதுங்கிப் பாய்வது இயற்கை. தரையிற் படுத்துக் கிடந்தால் மிதிபடுவது சகஜந்தானே. உரலில் தலையிட்டுக்கொண்டபின் உலக்கை விழாமல் நிற்குமா? ஊரார் உன்தோளில் சிறகொன்றைச் சுமத்தச் சும்மாவிருந்தால் பின் பெரும்பசுவையும் சுமத்தத் துணிவார்களென்று சொல்லவும் வேண்டுமோ? நம்மை யடுத்திருப்போரை மனோவிருத்தியும் புத்தி விசாலமும் பெற்று நற்குண நற்செய்கைகள் வாய்ந்தவராய் வாழச்செய்து இன்புறுத்துவது நமது கடமையே. ஆனால் நாம் இங்கே சொல்லவந்தது அதுவல்ல.

ஏமாந்த ஆள் எங்கே யகப்படமாட்டான் என்று எப்பொழுதும் தேடித்திரியும் சதிகாரர்கள் சகத்திலுண்டு. அவர்களது நாகரிகச்சொல்லின் வயப்பட்டு அவர்கள் எண்ணியவாறெல்லாம் பண்ணி முடிப்போமாகில்தாம் பெறத்தக்க பயனெல்லாம் அனுபவித்துப் பின் ஏறிச்சென்ற ஏணியை உதறித் தள்ளுவதுபோல் நம்மையும் உதறித்தள்ளுதல் உறுதி. காக்கையின் மூக்கிலிருந்த கறியைப்பறிக்கவேண்டி அதனைக்குயிலின் குரல்கொண்ட கோமளமே என்று இச்சகம்பாடியநரியைப்போல நம்மையும் அவர்கள் நளனென்றும் சிபியென்றும் முகமன் பேசித் தங்கள் காரியம்முடிந்தபின் "கழுதையே! எங்கள் குங்குமம் சுமந்துவந்து வீடு சேர்ந்தது; போய்வரலாம்" என்பது ஒருதலை. "இன்னார்கனியும் மொழியுங்கடுவே" என்ற குமரகுருபரசுவாமிகள் நீதிநெறிவாக்கியம் மறக்கற்பாலதன்று என்றும். நம்மை மிகவும் அதிகமாகப்பிறர் தட்டிக் கொடுத்துத் தூக்கிவைத்தால் அவர்கள் நம்மை வஞ்சிக்கவோ அல்லது நம்மால் பயன்பெறவோ உத்தேசித்தே செய்கிறார்கள் என்று துணியலாம். அவர்கள் கரும்பின் சாறெல்லாம் உறிஞ்சியபின் சக்கையை வீசியெறிந்து விடுபவர்களே. ஆகையால் வருமுன்காப்போனாய் தீர்க்கதரிசியாய்க் கருமம் இயற்றல் இன்றியமையாதவழி. சிலதருணங்களில் அன்பர் கனிந்து பேசும் இன்னுரையினும் பகைவர்பேசும் அவதூறே ஆபத்தினின்றும் நம்மை யகற்றலாம். மூடன் காதில் கேட்டதெல்லாம் நம்புவான். அறிவனோ ஆய்ந்தோய்ந்தே அங்கீகரிப்பன். மனச்சாக்ஷியனுமதி கொடுக்குந்தூரம் பிறன் போகும்வழியிற் கலந்து செல்லலாம். நம் நெஞ்சுக்கு ஒவ்வாதவிடத்தில் "அண்ணே! போய்வா" என்று விட்டு அகல்வது அவசியம். சிநேகம் செய்யத்தலைப்படும்பொழுது இஷ்டன் மனமொப்பிச் செல்லும்வரை ஒத்து நடந்து, பின் கூடியசீக்கிரத்தில் நாம் மெழுகாற்செய்த பிரதிமை யல்லவென்றும் நமக்கும் தனிமனம் உண்டென்றும் அம்மனத்தின் நல்லறிவுக்கேற்ப நடக்கும் தீரம் உண்டென்றும் அவனுக்கறிவித்தல் வேண்டும். வழிவிலகிக் குறுக்கு வழியில் செல்லுவதாய்க் கண்டதும் பின்னிடைந்து போனவழியே திரும்புதல் நலம். பெருங்குற்றங்கள்செய்யாமல் தற்காத்து கொள்ளற்கு உபாயம் சிறுந்தவறுகளைக் கண்டுழி அங்கங்குலைவதே. ஆகையால் படுகுழியில் வீழ்த்துமுன் வண்டிக்காளையின் மூக்கணாங்கயிற்றை இழுத்துப் பிடித்தல் ஏற்றது. நட்டான் மனத்தைப் புண்ணாக்குவது பேரிழவல்ல, நம் நடுவு நிலைமையையும் குணத்தையும் நடத்தையையும் இழத்தலினும் திரும்புகால் சந்தில் நடக்க நாணப்பட அக்கறையில்லை. பயங்கொள்ளி, புறந்தருவோன் என்று இகழப்படுதலைக் கண்டு ஏங்கவேண்டா, தீவழியிலிருந்து நல்வழியிற்றிரும்புங்கால். "வழியே ஏகுக, வழியே மீளுக" ஆதலின். என்றென்றைக்கும் எரிவாய் நரகத்தில் வீழ்ந்து படுதலினும் வளம்பார்த்து விழித்துத்திரும்புதல் எவ்வளவோ மேல். நா இன்புற நக்கிக்கொல்லும் கவையமாபோல் நயத்தகு நாகரிக வார்த்தைகள் பேசுவோரைக் கேட்டு செயத்தகாதன செய்துசாவற்க. பொன்கத்தி யென்று கழுத்தையறுத்து கொள்ளலும் ஒன்று. நல்ல நிலையில் ஊன்றிநிற்கவும், மலைசலிப்பினும் மனஞ்சலியாது அந்நிலையைப் பற்றி நிற்கவும் கற்றல் கோடி பெறும். "மாட்டேன்" என்று சொல்லத் தெரிந்தால், அநேகம் வேதபுராணங்கள் படித்தறிய வேண்டிய நீதிகள் தெரியவேண்டாவாம். பல்லோர்க்கும் தோழனாயிருப்பவன் ஒருவனுக்கும் சிநேகிதன் ஆகமாட்டான். இல்லையேல் ஊராரை ஊட்டி வளர்ப்பதில் தன் பெண்டு பிள்ளைகள் உண்ணுஞ் சோற்றில் உப்புமண்ணைத் தெள்ளியடிக்கும் திருடனாவான். மற்றெல்லாக் காரியங்களிலும் போ

லவே ஔதாரியத்திலும் பகுத்தறிவு வேண்டும். பாத்திரமறிந்தே பிச்சையிடவேண்டும். மிகவும் கோழைமனதுள்ளோன் தன் மக்களுக்குக்குரூரமுள்ளவனாகலாம்; அவர்கள் தின்னுஞ் சோற்றைப்பிடுங்கி, வயிறு நிறையும்வரை வாழ்த்திப் பின் வசைபேசும் வீணர்க்கிட்டுவைப்பின். சிநேகிதன் என்று கடன்கொடுத்துதவுவோன் இறுதியில் பணத்தையும் சிநேகிதனையும் இழத்தல் இயல்பு. பிணைப்பட்டுத்துணைபோவோன் சந்தியில் திண்டாடிநிற்பான். போனால் போகட்டுமென்றுஒருவன் தன்கையிலிருந்து இழக்கத்துணியும் தொகைக்குமேல் எப்போதும் பிணைப்படல் நியாயமற்றது. "பிணைப்பட்டுத் துணைபோய் நீ நிற்கவேண்டாம்" என்ற உலகநாதன் நீதிமொழி நிலைத்த மொழியே.

நமக்குப் பிறர் தீங்கிழைத்தகண்ணே, இழைத்தோர்மாட்டுக் காய்தலகற்றிப் பொறுத்துநிற்பதே பெருந்தன்மை. ஆனால் அத்தீங்கின் கொடுமையை நாம் அறியாததுபோல் நடிப்பது அறிவின்மையாம் அப்படிச் செய்வது நம்பகைவரை மற்றுந் தீங்கிழைக்கக்கையால் விளிப்பது போலாகும். அவர்கள் மனந்துணிந்து மறுபடியும் உதைக்கத் தலைப்படுதல் உறுதியே. "சிறியபகையெனினும் ஓம்புதல் தேற்றார் பெரிதும் பிழைபாடுடையர்." ஒருவனிடத்தில் இரண்டுதரம் ஏமாந்த ஏழை மோசஞ்செய்தவனினும் மோசமானவனே. நம்முடைய சுதந்தரங்களையும் நியாயத்தையும் அப்போதைக்கப்போது அற்றத் தீர்த்துக்கைப்பற்று விட்டால் பின்னர் எதிலரை நோவதெவன்? அமரருள் உய்க்கும் அடக்கமும் அமரிக்கையும் அமைந்தவனேனும் அவனும் மனிதனேயன்றோ? உப்பும் சோறும் உணர்ச்சியோடு தின்னும்பொழுது ரோஷம் எங்கே போகும்? அநேகருக்கு இந்தப் பாடம் சொல்லித்தரவேண்டியதேயில்லை. தங்களை யாரேனும் அவமதிப்பதாய் மனதுக்குப் பட்டால் போதும். உடனே பாம்பு படமெடுத்துச் சீறுதல்போல இவர்களும் சீற்றத்தை ஏற்கிறார்கள். கதவண்டை சத்தஞ்செய்தது திருடனா நாயா என்றறியத் தாமதிக்காமல் கல்லெடுத் தெறிவதிலேயே கண்ணாயிருப்பார்கள். அத்தகையோர் அண்டையிலிருப்பதும் அடுக்காது. முன்கோபக்காரரோடிணங்கவேண்டாம் என்பது உலகநீதி. அடக்காக் கோபங்கொள்வாரோடு உரையாடவும் ஒண்ணாது. உள்ளத்தைக் கவர்ந்து எழுந்து ஓங்கும் சினத்தைக் காத்துக்கொள்ளக்கூடியவர்களே குணசாலிகள். ஆத்திரக்காரன் என்றென்றைக்கும் முழுமூடனே. நாவடக்கமின்றித் துடித்துப் பேசுவோனை நல்வழிக்குத் திருப்புவதினும் நாயின்வாலைக் குணக்கெடுத்தல் கூடுமான காரியம். கொண்டது விடாமையில் முதலையும் மூர்க்கனுமொன்றே. தலையைத் துணித்தாலும்வாயிற் கௌவியதை முதலைவிடாதது போல தான்கொண்ட கொள்கையால் எத்தனை கேடுவிளைந்தாலும் மூர்க்கனும் தான் பிடித்த பிடிவாதத்தைவிடான். கருப்புநாயை வெள்ளை நாயாக்கினாலும் ஆக்கலாம். செங்கல்லைத் தேய்த்தலம்பி சலவைக்கல்லும் செய்யலாம். மூர்க்கனை மாத்திரம் நல்வழியில் திருப்பலாகாது. சரியோதவறோ அவன் பிடித்ததே அவனுக்கு வேதப்பிரமாணம்.

"கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறூஉம்
குற்றந் தமதே பிறிதன்று—முற்றுணர்ந்தும்
தாமவர் தன்மை யுணராதார் தம்முணரா
எதிலரை நோவ தெவன்."

"வைகலு நீருட் கிடப்பினுங் கல்லிற்கு
மெல்லென்றல் சால வரிதாகுமஃதேபோல்
வைகலு நல்லறங் கேட்பினுங் கீழ்கட்குக்
கல்லினும் வல்லென்னு நெஞ்சு."

ஆனால் பிடிவாதத்தில் பேதவகையுமுண்டு. கொண்ட கொள்கை நல்வழிப்பட்டதேல் பிடிவாதமே பீடுபெறச்செய்வதாம். அப்போதைக்கு உலகத்துக்கு ஒவ்வாதவேனும் தம்மதம் நிறுவியதோடு புகழுடம்பையும் நிறுவியமேலோர் பிடிவாதத்தையே அடிப்படையாக்கொண்டவர்கள். நன்மார்க்கத்தில் பிடிவாதங் கொள்வோர்களோ அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தங்களைத் தாங்கி நிற்போருக்கே நல்ல பெயர் பெறுவிப்பார்கள். பிடிவாதங்கொண்ட முழுமகன் ஆச்சாமரத்தில் ஆணியறைய கைமுஷ்டியால் தாக்கினால் ஆணிதான் கையிற் றைக்கும் என்பதையறியான். தான் கேட்கும் விலைவரும் வரையில் விற்பதில்லையென்று தவசத்தை (தானியத்தை)க் குதிரில் கூட்டிவைத்தால் எலி தின்றுதீர்க்காமல் விட்டுவிடுமா? ஆத்திரத்தில் செய்துகொண்ட பிரதிக்கினைகளை அடுத்த க்ஷணத்தில் மறப்பதேமேல். எவனொருவன் மாறுபாடிலனோ அவன் என்றும் பேம்படுதலும் இல்லையாம். வணங்கத்தெரியாதவன் வெற்றியடைதலுமில்லை.

சிறுவர்கள்விஷயத்தில் நாம் எப்பொழுதும் சுமுகமாயிருத்தல் அவசியமேனும் மனவுறுதியுள்ளவர்களா

யுமிருக்கவேண்டும். அவர்கள் மனம் போனபோக்கெல்லாம் விட்டுவிடவுங் கூடாது. போகும்வழியில் எல்லாம் எப்பொழுதும் குறுக்கே நிற்கவும் கூடாது சிறுவர்கள் அழும்பொழுதெல்லாம் அவர்கள் கேட்பதையெல்லாம் கொடுத்துச் சீராட்டினால் பிறகு அவர்கள் தறிதலைகள் ஆவதற்கு சந்தேகமும் உண்டோ? தூத்தாரி கொண்டுசெருகிசேர்த்துப்பாடக்கற்றோனும்செல்வமாய்வளர்ந்தகுழந்தையும்எட்ட இருந்தாலும் வேண்டாவிருந்தே.பருவத்திலேயேஅவர்களைநல்வழிப்படுத்தி கோணலைநிமிர்த்தாவிட்டால் பின்னுக்கு அச்சிறுவர்கள் ஊரார்க்கு உதவாக்கழுதைகள் ஆவதுமன்றிபெற்றோர்மனத்தையும் புண்ணாக்குவார்கள்.“பழியின்மை மக்களாற்காண்க” என்றதுநான்மணி. அடியாதபிள்ளை படியாது.

“வருத்தவளைவேயரசர் மாமுடியின்மேலாம்.”சிறுவர்களைக் கண்டித்துக் கூப்பாடுபோட்டுப் போட்டுத் தலைவலிக்கின்றதென்று தயங்குவோர்பின் அவர்கள் வயதுவந்து செய்யும் தீக்கருமங்களைக் கண்டு மனம் முறியவேண்டி வருமென்பதைக் குறிக்கொள்வாராக. நாம்சிறுவர்களோடு பேசும்பொழுதெல்லாம்உண்மையேபேசல் வேண்டும். விளையாட்டாகக்கூட ஒவ்வுரைகள் பேசலாகாது. உண்டென்றால் உண்டாகவே இருக்கவேண்டும். இல்லையென்றால் இல்லையாகவேயிருக்கவேண்டும். ஒருதரம் இப்படியும் ஒருதரம் அப்படியும் மாறிப்பேசலாகாது. குழந்தைகளுக்கு ஒன்று கொடுப்பதாய்ச் சொல்லிப் பின் கொடுக்கமறக்கலாகாது. தின்னத்திண்டியானாலும்சரி, கன்னத்தில் அடியானாலும் சரி, சொன்னதற்குப்பிறகு கொடுத்தேதீரவேண்டும். என்ன செய்யவேண்டிவந்தாலும்சரி கட்டளைக்குக்கீழ்ப்படிந்து நடக்கக் கற்பிக்கவேண்டும். கட்டளை மீறிச்செல்ல அணுவளவும் இடங்கொடுக்கலாகாது. “ஏவாமக்கள்மூவாமருந்து”. நம்மைஏவும் மக்களைப்பெற்றால் இளமையிலேயே மூப்படைவோம். அவர்கள் நன்மையை நாடியே நாம் சொல்வதைக் கேட்கச் செய்யவேண்டும். ஒருதரம் நம் கைப்பிடியிலிருந்து அவர்கள் நழுவினால் பின்பு அவர்கள் பிடிக்கு அடங்க மாட்டார்கள். ஆனால் நாமும் சிறுவர்கள் கோபம் மூளும்வரை அவர்களைத் தூரத்தலாகாது. பிறகு மனம் முறிந்து எதிர்த்துப் பேசுவார்கள். ஆகையால் எப்பொழுதும் ஸர்வேசுவரனுடைய ஆணையை யனுசரித்தே நம் மனைவாழ்க்கையை மாட்சிமைப் படுத்துவோமாக. அவரும் நம்மையும் நம் வழிவந்தோரையும் வாழ்த்திப் போருள் புரிவார்.

ஜ. வே. சுப்பிரமணியம்.

நாம் குடிக்கும் தண்ணீர்

THE WATER WE DRINK

நாம் உட்கொள்ளும் உணவில் முக்கியமான பாகம் ஜலமென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். நம் சரீரத்தின் மூன்றில் ஒரு பாகம் எடை ஜலம். சாப்பிடுகிற கட்டி ஆகாரங்களுடைய சாரம் இரைப்பையினின்று ரக்தத்தில் சேர, ஜலத்தில் கரைந்தே சேரவேண்டும். தேகத்தின் கழிவு பதார்த்தங்கள் தேகத்தைவிட்டு வெளிவருவது ஜலத்தில் கரைந்தே வியர்வையாகவும், மூத்திரமாகவும் வெளிவரவேண்டும். தேகத்தில் நடக்கும் சகலவிதமான மாறுதல்களுக்கும் ஜலம் முக்கியமானது. ஆகையினாலே நாம் ஜலத்தைப் பலவிதமாக உட்கொள்ளுகிறோம். நாம் கெட்டியாகாரமென்று சாப்பிடுவதெல்லாம் முக்கால்பங்கு ஜலமாக இருக்கும் அது தவிர சுத்தஜலமாகவும், வேறு திரவ பதார்த்தங்களாகவும் தண்ணீரை உட்கொள்ளுகிறோம்.

நாம் சாப்பிடும் ஜலம் சுத்தமாக விருந்தால் உடம்பிற்கு ஆரோக்கியமென்பதற்கு சந்தேகமில்லை. எப்படிச் சுத்தமாக விருக்கவேண்டுமென்பதை கொஞ்சம் கவனிப்போம்.

ஜலம் ஆகாயத்தில் நீராவியாகவோ, சிறு துளிகளால் நிறைந்த மேகமாகவோ, இருக்கும்பொழுது சுத்தமாகவே இருக்கிறது. மேகத்தினின்றும் மழைத்துளிகளாகவிறங்கும்பொழுது, வாயுமண்டலத்திலிருக்கிறபலவித வாயுக்கள் அதில் கலக்கின்றன. தரையில் விழுந்ததும்தரையிலிருக்கும் பலவித உப்புகளும் பிராணிகள்புற்பூண்டுகள் முதலியனவின் கழிவுபதார்த்தங்களும் அதினுடன் கலக்கின்றன. இந்த ஜலத்தில்சிலபாகம் தரைக்குள் இறங்கி ஊற்றுகளாகவும், கிணறுகளாகவும், வெளியே வருகின்றது. சிலபாகம் ஓடைகளாகவும், சிற்றாறுகளாகவும், ஓடி பெரிய ஆறுகளிலோ, ஏரிகளிலோ, குளங்களிலோ சேர்ந்து ஜனங்களால் உபயோகப் படுத்தப் படுகிறது. இவ்விரண்டு விதமான ஜலத்திலும் அழுக்குகள், அதாவது அன்னிய பதார்த்தங்கள் கரைந்தோ மிதந்துகொண்டோ இருக்கின்றன. ஆனால் இந்த அன்னிய. பதார்த்தங்களில் சில குற்றமில்லாதனவாயும், சில துர்க்குணமுள்ளனவாயும் இருக்கின்றன. இந்த துர்க்குணமுள்ள பதார்த்தங்கள் இல்லாததாய் இருந்தால் அந்த ஜலம் சாஸ்திரப்படி சுத்த

மாய் இல்லாவிட்டாலும், நமதுபழக்கத்துக்கு வேண்டிய சுத்தத்தையுடையதாக நாம் எடுத்துக்கொள்ளலாம்.

ஜலத்திலுள்ள அன்னிய பதார்த்தங்களை இரண்டு விதமாகப் பிரிக்கலாம்: ஜலத்தில் மிதப்பவையென்றும், அதில் கரைந்திருப்பவையென்றும். ஜலத்தில் கரைந்திருப்பவை மண்ணிலிருக்கும் உப்புக்களும், ஜீவிய பதார்த்தங்களால் கழிக்கப்பட்ட உப்புக்களும். ஜலத்தில் மிதக்கும் பதார்த்தங்கள் மண்முதலியவைகளும், புல்பூண்டு மிருகாதிகளால் கழிக்கப்பட்டவைகளும், உயிருள்ள அணுக்களும். இவைகளில் மண்ணிலிருந்து கரைந்திருக்கும் உப்புக்களும் மிதக்கும் பதார்த்தங்களும், அதிக தீங்கில்லாதவை. உயிருள்ளவையிலிருந்து கழிவுபடப்பட்ட பதார்த்தங்களும் அணுஜீவன்களுமே அதிக தீங்கு செய்யக்கூடியவை; இவைகளிலும் உயிருள்ளவையிலிருந்து கழிவுபடும் பதார்த்தங்கள் ஜீவிய அணுக்களின் இருப்பையும் அளவையும் குறிப்பிடுவதனாலேயே கெடுதலானவையாயிருக்கின்றன. அதாவது, மனிதமிருகாதிகளின் கழிவுபதார்த்தங்களில் ஜீவஅணுக்கள் அபரிமிதமாக இருப்பதினாலேயும், அவை ஜீவ அணுக்கள் வளருவதற்கு நல்ல ஆஸ்பதமாயிருப்பதினாலேயுமே அதிக கெடுதலுள்ளனவாயிருக்கின்றன. ஏனெனில் ஜலத்தினால் பரவக்கூடிய கொடிய வியாதிகள் எல்லாம் இந்த ஜீவிய அணுக்களாலேயே உண்டாகின்றன.

ஆனால் இந்த அணுஜீவன்களிலும் தீங்கில்லாததும் தீங்கு செய்பவையுமிருக்கின்றன. புற்பூண்டுகள் வளருவதற் குபகாரமாக எவ்வளவோ அணுஜீவன்கள் தரையில்விர்த்தியாய் மண்ணில்அநேகவிதமான உபயோகமுள்ள மாறுதல்களையுண்டுபண்ணிக்கொண்டுவருகின்றன. இவைகள் சாதாரணமாக தீங்கற்றவை. வாந்திபேதி, சீதபேதி, சன்னிபாத ஜுரம் முதலிய வியாதிகளுக்குக் காரணமான அணுஜீவன்களே கெடுதியுள்ளவை இவைகள் எந்த ஜலத்தில் இருக்கக்கூடுமோ, அந்த ஜலம் கெட்டது.

வியாதிக்குக் காரணமான அணுஜீவன்கள், முன் வியாதியாயிருந்த தேகத்திலிருந்துதான் ஜலத்திற்கு வந்திருக்கவேண்டும். ஆகவே மனிதர்கள், மிருகங்கள் இவைகளினுடைய கழிவுபதார்த்தங்கள் எந்த ஜலத்தில் அதிகமாயிருக்கிறதோ, அல்லது அதிகமாயிருக்கக்கூடுமோ, அந்த ஜலம் அபாயமானது. இவ்வித பதார்த்தங்கள் பின்வரும் ஜலாதாரங்களில் அதிகமாக இருக்கக்கூடும்:—

1. மனிதர்கள் வசிக்கும் இடங்களுக்குப் பக்கமாக ஒடி குட்டையில் அல்லது குளத்தில் தங்கும் ஜலம்.

2. வீடுகளுக்குப் பக்கத்தில் (சாக்கடைகளுக்குப் பக்கத்தில்) இருக்கும் ஆழமில்லாத கிணறுகள்.

3. அதிகமாக வஸ்திரந்தோய்த்தல், கைகால் கழுவுதல் முதலிய காரியங்கள் நடந்துவரும் சிற்றாறு அல்லது ஓடைகள்.

அவ்விதமே, மனுஷ்ய மிருகாதிகளின் கழிவுபதார்த்தங்கள் சேராத, அல்லது சேரக்கூடாத ஜலம், தீங்கற்றது. அவையாவன மேல்நிலங்களில் (அதாவது மலை முதலிய ஜனங்களுக்கு சுலபத்தில் எட்டாத இடங்களில்) இருந்துவரும் ஆற்றுஜலம், ஆழமுள்ள கிணற்றுஜலம். இந்த ஜலத்தை அந்நியபதார்த்தங்கள் சேர்ந்து கெடுக்காதபடி வீடுகளுக்குச் சேர்த்துக் கொண்டுவந்து கொடுக்கமுடியுமானால் அது உத்தமமானதென்றே சொல்லலாம். ஆனால் அது சாத்தியமானதா? மலையிலிருந்துவரும் ஜலம் ஆறுகளின் வழியாக சமநிலங்களை யடைந்ததும், நகரங்களினருகாமையிலும், கிராமங்களினருகாமையிலும் ஒடி அங்குள்ள அழுக்குகளையெல்லாம் அடித்துக்கொண்டு போகின்றது: ஜனங்கள் சௌசம் ஸ்நாநம் முதலானவை செய்வதினாலும், மாடுகள் முதலியவை கழுவுவதினாலும், ஆற்றுஜலமும் கெட்டுப்போகின்றது. ஆழமுள்ள கிணறுகளின் ஜலமும், ஜனங்கள் கிணற்றோரத்திலிருந்து ஜலமெடுப்பதனால் ஜலம் காலில்பட்டு கிணற்றுக்குள் விழுவதினாலும், கயிறு கையில்பட்டுத் தேய்வதனால் அதில் உள்ள அழுக்கும்நம்உடம்பிலுள்ள அழுக்கும் கிணற்றில் விழுந்து சுத்த ஜலத்தைச் சேர்ந்து கெடுக்கின்றன. ஆதலால் சுத்தமானதும் தீங்கற்றதுமான ஜலம் கிடைப்பது துர்லபமாகிறது.

ஆனால் ஆற்றுஜலம் சுத்தியாவதற்கு சுபாவத்திலேயே ஏற்பாடுகள் இருக்கின்றன. ஆற்றுஜலமானது ஓடும்போது, ஒவ்வொருசமயமும் ஒருபுதிய பாகமானது மேல்வந்து,ஆகாயத்திலுள்ள காற்றில்மோதி அதை உட்கொள்ளுகிறது. அப்படிக் கறைந்தகாற்று ஜலத்தில் கரைந்திருக்கும் அழுக்குகளுடன் சேர்ந்து, அவற்றைக் குற்றமற்ற பதார்த்தங்களாகச் செய்துவிடுகின்றது. ஆனால் இவ்விதமாறுதல், ஆற்றுஜலத்தில் சேர்ந்திருக்கும் அழுக்கு கொஞ்சமாயும், இன்னும் அழுக்குகள் அடிக்கடி வந்து சேராமலும் இருந்தால் மாத்திரமே, பிரயோசன முள்ளதாய் இருக்கும்.

" கிணற்று ஜலம் கெட்டுப்போகாமல் இருக்கச் செய்யவேண்டிய உபாயங்களும் கெட்டுப்போன ஜலத்தை சுத்திசெய்யும் விதமும் பற்றி இன்னொரு சஞ்சிகையில் விவரிப்போம்:

K, நாராயண அய்யர், M. B. & C,M.

புன்னைமரம்

THE ALEXANDRIAN LAUREL.

முன்னுரை:—இம்மரம் நெடுங்காலமாய் நமது இந்தியாவின்கண் உள்ளது. இது பாலுள்ள மர வகையைச் சேர்ந்ததல்ல. நந்தவனத்தில் வைக்கும் மரவகையைச் சேர்ந்தது. தஞ்சை ஜில்லாவிலுள்ள திருமுல்லைவாயிலில் விசேஷமாயுள்ளது. இது பலன்தரும் மரங்களில் ஒன்று.

நிலத்தின் தன்மை:—வெண் மணற்பாங்கானவும் கடற்கரை யோரமாயுள்ளவுமான தரையே விசேஷமானது. செவ்வல், கரும்பாரை, நெய்ஸ் என்னும் பாரை முதலியவைகள் மடித்துப் பொடியானதினால் உண்டாகுந் தரையு முசித்தானது.

பயிர்செய்தல்.—இது பதினறடிக்குஒருமரம்வீதம் பயிர்செய்தல் வேண்டும். நான்கடி அகலம் ஐந்தடியாழம் குழிவெட்டி, அக்குழியாருமாற இரண்டுநாள் காற்றோட்டமாய் வைத்தல்வேண்டும். அஃதாவது குழியில் எரு முதலியது போடாமல் வைத்தலே. பிறகு மாட்டெரு, ஆட்டெரு, செடிதழை. இவை மடித்த எரு, குளத்துவண்டல், நெற்பதர் முதலியவைகளில் கிடைக்கக்கூடிய எருவை அந்தக்குழியில் நாலடி உயரம் போடவேண்டும். பிறகு அதன் மேல் கொஞ்சம் மணற்போட்டு நன்றாய்க் கொத்தி வாங்கி நல்ல விதையாகப் பொறுக்கி அதில் போடவேண்டும். உடனே தண்ணீர் விடவேண்டும். ஒரு வாரம் காலை மாலையும், பிறகு இரண்டுநாளைக்கு ஒருமுறை வீதம் ஒரு மாதமும், பிறகு நாலுநாளைக்கு ஒருமுறை ஆறுமாதகாலமும் தண்ணீர் விடவேண்டும். இவ்வரையறையைக்கடந்து மழைபெய்த காலத்தில்நிறுத்தியும், வெயிற்காலத்தில் தாராளமாய்த் தண்ணீர் விட்டுக்கொண்டும் வரவேண்டும். ஒரு வாரத்தில் முளைக்கிளம்பும். பின்னர் சிறுகச்சிறுக வளர ஆரம்பிக்கும். மூன்று வருஷம் வரையில் தண்ணீர் ஊற்றிக்கொண்டுவரவேண்டும்.

சாதுபடிசெய்கிற நிலம்:—இது பயிர் செய்கிறதற்காக 100 குழி நிலம் எடுத்துக்கொள்ளுவோம். குழி ஒன்றுக்கு ஒருமரம் வீதம் 100 கன்றுகள் பயிர்செய்யலாம். இந்த நிலத்தைக் குழி போடுகிறதற்குமுன்னமே நாலுதரம் நன்றாய் உழுது அதிலுள்ள புற்பூண்டு வகையறுக்களை நீக்குவது நலம்.

வேலியடைத்தல்:—இந்த நிலமுழுவதையும் நாலு பக்கத்திலும் 6 அடியுயரம் வேலியடைக்கவேண்டும். இது எதற்காகவென்றால் குழிகளையும் முளைகளையும் ஆடுமாடு முதலியவைகள் மிதித்து கெடுதிசெய்யாவண்ணமே. சற்று வளர்ந்தபோதிலும் வேலி யவசியம். இல்லாவிடில் எருமைமாடுகள் தன் தேகத்திலுண்டான அரிப்பை அந்த செடிகளில் உறைந்து போக்கிக் கொள்ளுகிற வழக்கமுண்டு. இதனால் செடிகளின் கிளைகள் முரிந்து கெடுதியுறுகின்றன. ஆடுமாடு முதலியவைகள் இந்தச் செடிகளை கெடுதி செய்யாமல் பாதுகாத்து வரல்வேண்டும்.

பராமந்து:—ஆடிமாதத்திலும், தைமாதத்திலும் ஒவ்வொரு குழியையும் செவ்வையாக மூன்றடியாழம் கொத்தி பாத்திகட்டவேண்டும். அந்தந்த செடியின் உதிர்ந்த இலைகள் அந்தந்த செடிக்கே எருவாக உபயோகப்படுமாறு செய்தலேநலம். மழைத்தண்ணீர் இந்த பாத்திகளில் நின்று அந்த எருவின் சாரம் வேர்களில் உறைக்குமாறு செய்கிறது. இதனால் செடி நன்றாய் வளர எது வுண்டாகிறது.

வளர்ச்சி:— இது ஒழுங்காய் வளருந்தன்மை யுடையதல்ல. கோணலாகவே வளர்கிறது. வேரிலிருந்தே கிளைகள் கிளம்பி தாய் மரத்தோடு வளர்கின்றன. நாலாபக்கங்களிலும் பெரிய கிளைகள் உண்டாகிற குணமுடையது அல்ல. இதன் மேல் பட்டை முண்டும் முடிச்சுமாகவே இருக்கிறது. பெரிய மரமாக வளர்ந்து சுமார் 100வருஷகாலம் வரையில் இருக்கிறது.

நிறம்:—எப்பொழுதும் பச்சையாக விருக்கிறது. மரமும் கருப்புநிறமே.

பலன் தரும் காலம்:—ஐந்துவருஷத்திற்குமேல் ஏழுவருஷத்துக்குள் காய்ப்புக்கு வந்துவிடும்.

இலை:—பசு நிறமுள்ளது. இம்மரம் ஏகதேசம் இலையுதிர்க்குந் தன்மையுடையதல்ல, இதுகள் சாப்பிடும் கலன்களாக உபயோகப்படுகின்றன. அன்றியும் கழனிக்கு எருவாக உபயோகப்படுகின்றன. ஆடு தின்னைப்பாளையைத் தவிர எல்லாச்செடிகளையுந்தின்னும் குணமுள்ள ஆடும் இந்த இலைகளில் சிறுகசப்பு இருப்பதினால் இதை ஆகாரமாக தின்னுகிறதில்லை. இலையில் ஓர்விதமான பாலிருக்கிறது; காம்புகளிலுமுண்டு. இதுகள் மெருகுத்தாள்களாக உபயோகப்படுவதாகத் தெரிகிறது.

பூ:—மணமுள்ளது. பூஜைக் குபயோகமானது. வருஷத்திற்கு இரண்டுமுறை பூத்து இரண்டுமுறை பலன் கொடுக்கக்கூடியது. சித்திரை, வைகாசி மாதங்

களிலும், கார்த்திகை, மார்கழி மாதங்களிலும் பூக்கிறது. புன்னைமரம் பூத்திருக்கும்போது பார்த்தால் செவ்வையாய் அலங்கரிக்கப்பட்ட தேருக்குச் சமமாக விருக்கும். மணமும் நெடுந்தூரம் வீசும்

காய்:—சித்திரை வைகாசியில் பூத்துக் காய்த்து கார்த்திகை மாதம் பலன் கொடுக்கிறது. கார்த்திகை, மார்கழியில் பூத்து காய்த்து ஆனி மாதத்தில் பலன் கொடுக்கிறது. மரத்தில் பழமும் பூவும் கலந்திருக்கின்றன.

பழம்:—கொஞ்சந் தித்திப்புள்ளது. ஏழைகள் இதை உண்கிறார்கள். பழம் அதிக சதைப்பற்றுள்ளதாக விருக்கிறது.

பருப்பு:—கொட்டையை யுடைத்து ஓடு முதலியவற்றை நீக்கினால் அதனுள் இருப்பது பருப்பு என பெயர் பெறும். இவ்வாறு பருப்பு எடுத்து நன்றாக வெயிலில் எண்ணெய்க் கசிவுண்டாகும் வரையில் காயவைத்துப் பிறகு செக்கிலிட்டு ஆட்டவேண்டும்.

எண்ணெய்:—நெய்போல் உறையுந்தன்மையுடையதல்ல. சிறு கசப்பாக விருக்கும். பலகாரம் முதலிய சிற்றுண்டிகள் செய்யப் பிரயோஜனப்படா. விளக்கு எறிவிடுகிறதற்கு மிகுதியாக உபயோகப்படும். யந்திர முதலியவைகளுக்கு உபயோகப்படுத்தலாம். கல்லியாண முதலிய சுபசடங்குகளுக்கு உள்வலஞ் செய்கிறதற்குத் தீவத்தி எண்ணெயாயும் உபயோகப்படுகிறது. சிலர் தேவாலயங்களுக்கும் உபயோகிக்கிறார்கள். ஆனால் இது கூடாது.

பிண்ணாக்கு:—அடுப்புக்கு விறகாக உபயோகிக்கிறார்கள். நிலத்திற்கு எருவாக மிகுதியாய்ப் பிரயோசனப்படுத்தப்படுகிறது.

மரம்:—ஒழுங்காய் மரங் கிடைக்குமானால் வீடுகளுக்கு உபயோகப்படுத்தலாம். ஆனால் கிடைப்பதரிது. மிதியடிக்கட்டைக்குப் பிரயோஜனப்படுகிறது. ஆனால் விறகாகத்தான் அதிகமாய் உபயோகப்படுத்தப்படுகிறது.

வேர்:—இம்மரங்களுக்கு வேர் அதிகமாய் நாலா பக்கங்களில் பெரிதா இறங்கும் குணமுள்ளது. மரத்தைப்பார்க்கிலும் வேர் ஒழுங்காய் இறங்கும். நல்ல பருமனுள்ளதாகவு மிருக்கும். ஆலயங்களுக்கு வாகனங்கள் செய்யவும் மிதியடிக்கட்டைக்கும் மிகுதியாய் உபயோகப்படுகிறது. மேஜை, நாற்காலி, பெஞ்சிகள்முதலியவைகளுக்குச் சட்டமாகவும்காலாகவு முபயோகப்படுத்தலாம்: மரம் வேர் சிறுபெட்டிகள் செய்யவும் பிரயோஜனமே.

செலவு.—இதைப் பயிரிட ஆரம்பித்ததுமுதல் காய்ப்புக்கு வரும்வரையில் நிலத்தின் சொந்தக்காரர் மேற்பார்வை செலுத்திவரின் ரூ 150-க்கு மேலாகாது. இதைவிட குறைவாகவே யடங்கவேண்டும். இந்தப் பயிருக்கு மூன்று வருஷத்திற்கு பிறகு தண்ணீர் அதிகம் தேவையில்லை. அதிக கவனிப்புந் தேவையில்லை.

மகசூல்விலை:—மரமொன்றுக்கு இரண்டு மகசூல்களுஞ் சேர்ந்து குறைந்தது ஒரு ஆடம் காய்க்கும். ஆடம் 4 ரூபாய் விற்கிறது. எண்ணெய் 6 ரூபாய் விற்கிறது. சிலமரம் இரண்டு மூன்று ஆடமும் சில மரம் கால் ஆடம் அரையாடமும் காய்க்கும். சராசரி வருஷத்திற்கு மரம் ஒன்றுக்கு ஒரு ஆடவீதம் 100 மரத்திற்கும் 100 ஆடம் காய்க்கும். ஆகையால் மொத்த மகசூலின் விலை ரூபா 400. பயிரிட நேர்ந்த செலவுபோக பாக்கி காய்ப்புக்குவந்த முதல் வருஷத்திலேயே ரூபாய் 250 லாபங்கிடைக்கிறது. பிறகு வருஷத்திற்கு ரூபாய் 20 செலவு செய்தால் போதுமானது. பாக்கி லாபமே.

புராணஐதீகம்:—சிவனுக்கும் மகாவிஷ்ணுக்கும் உற்சவாதிகளுக்குப் புன்னைமரம் வாகனமாக உதவுகிறது. ஸ்ரீகிருஷ்ணன் கோபிகாஸ்திரிகளின் ஆடையைக் களைந்துகொண்டுபுன்னைமரத்தில் ஏறிக்கொண்டார்.

கற்பனை:—இவ்வளவு லாபங்கொடுக்கக்கூடிய இந்தப் புன்னைத்தோட்டம் பயிர் செய்யாது நமது நாட்டுச்சனங்கள் வீண்காலம் போக்கிக்கொண்டும், வீண் பேச்சுப் பேசிக்கொண்டும் வாழ்நாளை வீணாக்கிப் பஞ்சத்தால் மோதுண்டு வருந்தி புழலுகின்றனர். காலத்தின் அருமையும், உழைப்பின் பெருமையும் நன்குணர்ந்து இந்தமாதிரி பலன் கொடுக்கக்கூடிய தோட்டங்களைப் பயிர்செய்து தக்கலாபத்தை யடைந்துசெல்வாழ்க்கையோடு வாழவேண்டு மென்பதே நங்கொள்கை. இதை வாசிக்கும் கனவான்களில் ஒருவருக்காவது இப்பயிர் செய்து லாபம் அடையலாமென்கிற எண்ணம் உண்டாகாதா என்பதை யோர்ந்து இவ்வியாசம் எழுதப்பட்டது.

பு. து. இரத்தினம் பிள்ளை.

குமார ஸம்பவம்

BIRTH OF KUMARA

பண்டித நடேச சாஸ்திரியாரால் மொழிபெயர்ப்பு

மூன்றாவது சருக்கம்

34. சிவபெருமானுடைய தபோவனத்திலிருந்த முனிவர்கள், இவ்வாறு காலமல்லாத காலத்தில் வஸந்தன் தோன்றியதைக் கண்டு, வெகு சிரமத்துடன் தங்களுடைய மனோவிகாரங்களை அடக்கிக்கொண்டு தங்கள் மனதைக் கட்ட வெகு சிரமப்பட்டார்கள்.

35. அன்றியும் அவ்விடத்தில் மன்மதன் தன் தோளில் வில்லைத் தாங்கிக்கொண்டு ரதியுடன்கூட வரவே ஸ்தாவர ஜங்கமங்கள் எல்லாம் அதிக அன்பின்ரஸத்தோடுகூடிய சிருங்கார சேஷ்டையை செய்கையால் வெளியிடலான.

சிருங்காரசேஷ்டை.

36. வண்டுகள் மலர்களாகின்ற ஒரே பாத்திரத்தினின்று தேனை தங்கள் நாயகிகளுடன் அவர்கள் குடித்தபின் குடிக்கலாயின. கிருஷ்ணஸார மான் தங்கள் பேடுகளை அவைகள் ஸ்பர்சசுகத்தால் கண்களை ஆனந்தமாக மூடிக்கொண்டு ஸந்தோஷிக்கும்படி தங்கள் கொம்புகளால் சொறிந்துகொடுக்கலாயின.

37. தாமரைத்தாதின் மணம்வீசும் உமிழ்ஜலத்தை பெண்யானையானது அதிக அன்புடன் ஆண்டானைக்குத் தன் துதிக்கையால் கொடுக்கலாயிற்று, சக்கிரவாகப்புள் தான் பாதிபுசித்துமிருந்துநின்ற தாமரைத்தண்டை புசிக்கும்படி தனது நாயகியிடம் கொடுக்கலாயிற்று.

38. சிரமத்தால் தோன்றிய வியர்வைத் திவலைகளால் கொஞ்சம்தங்கள் பச்சையிலைப்பொட்டுகள் கலைய மலர் மது உண்டு கண்கள் சுழலவிளங்கும் தன் காதலியின் முகத்தை கிம்புருஷன் அவள் பாடி ஓய்ந்ததும் முத்தமிட்டுக்கொள்ளலானான்.

39. நன்றாக மலர் நிரம்பிய பூங்கொத்துக்களை ஸ்தனங்களாகவும், பிரகாசிக்கும் இளந்தளிர்களை மனோகரமான உதடுகளாகவும் பெற்று அழகான மடந்தைகள் போல் விளங்கும் கொடிகளை வளைந்த தங்கள் கிளைகளாகின்ற கைகளால் மரங்களும் தழுவிக்கொள்ளலாயின.

40. அவ்வண்ணம் வசந்தன் விளங்கிய காலத்தில் அப்சரகானம் இடைவிடாமல் காதில் விழுந்து கொண்டேயிருந்தபோதிலும் ஈசன் தனது தவத்திலேயே முற்றிலும் ஆழ்ந்தியவராகவேயிருந்தார். ஐம்புலன்களையும் அடக்கி ஆளும் துறவிகளுக்கு இவ்விதமான இடையூறுகள் தவத்தைக் கெடுக்கும் வலிமையுள்ளவைகளாகாவன்றோ!

41. அச்சமயத்தில் நந்திகேசுரரும் தனது இடது கையில் பொற்பிரம்பு பிடித்து ஒருவிரலை தனது மூக்கின் நுனியில் வைத்து சிவபெருமான் கொடிவீட்டு வாயிலில் நின்றுகொண்டு பிரமதகணங்களை நோக்கி "சபலம் வேண்டாம்" என்று கட்டளையிடலானார்.

42. அவ்வாறு அவர் கட்டளையிட்டதும் மரங்கள் அசைவற்றும் வண்டுகள் ஒலியற்றும் பறவைகள் கூச்சலற்றும் மிருகங்கள் சஞ்சாரமற்றும் அக்காடு முழுவதும் சித்திரத்தில் எழுதப்பட்ட காடுபோல் சலனமேயில்லாமல் விளங்கலாயிற்று.

43. ஓர் ஊருக்கு பிரயாணம் புறப்படுகின்றவன் தான் போகும்திசையில் சுக்கிரனிருக்கக்கண்டால் அத்திசையை எவ்வண்ணம் துறப்பானோ அதுபோல மன்மதனும் ஈசனுக்கு எதிராகப் போவதைவிட்டு அச்சிவபெருமானுடைய பக்கங்களில் தேவதாருப் புதரடர்ந்து விளங்கும் இடத்தை நாடி அவருடைய தபோவனத்தில் நுழைந்தான்.

44. தனது சரீரத்தை ஒழிக்கவெகு ஸமீபகாலத்தை அடைந்துநின்ற அந்தமன்மதன் தேவதாருமரங்களின்கீழ் ஓர் திட்டாணியின்மேல் புலித்தோல் விரித்து தவத்தில் ஆழ்ந்தி அம்மூக்கண்ணன் உட்கார்ந்திருக்கக் கண்டான்.

தவத்திலிருந்த சிவபெருமானுடைய வர்ணனை.

45. வீராஸனம் போட்டுக்கொண்டு நிஷ்டையிலுட்கார்ந்த காரணத்தால் தமது முன்தேகம் அசைவற்று, நேராக நிமிர்ந்து கொஞ்சம் வளைந்து வீங்கிய இருதோள்கள் எடுத்துக்காட்ட தமது இரு உள்ளங்கைகளையும் மேல்காட்டி ஒன்றின்மேல் மற்றொன்றை தனது மடியில் தாமரைமலர் பூத்ததுபோல் விளங்க வைத்துக்கொண்டு சிவபெருமான் தவம்புரிந்தார்.

46. தமது ஜடாஸமூகத்துமேல் தூக்கி புஜங்களால் கட்டி தமது காதுகளில் இருமடிப்பாகருத்தி

ருத்ராக்ஷமாலை தரித்து தமது கழுத்தண்டைமுடிபோடப்பட்டகாரணத்தால்அதிகக்கருப்பாக விளங்கும் கருப்பு மான்தோலை மேல் போர்த்தியவராய் சிவபெருமான் தவம்புரிந்தார்.

47. கொஞ்சம் பிரகாசித்துக்கொண்டு அசைவற்றவைகளாயும் வெகு உக்கிரமுள்ளவைகளாயும் காணப்பட்ட கருவிழிகளை உடைய கண்களினால் புருவங்களின் அசைவு என்பது முற்றிலுமின்றி ஒளிமுழுமையும் கீழ்நோக்கிப் பாயத் தமது மூக்கின் முனையைக் குறியாகப் பார்த்துக்கொண்டு சிவபெருமான் தவம்புரிந்தார்.

48. தமது தேகத்துக்குள் புகுந்து சஞ்சரிக்கும் பிராணுபான முதலியவாயுக்களை அடக்கிய காரணத்தால் மழையின் குழப்பத்துக்கு முந்தி சஞ்சலமற்று விளங்கும் மேகம்போலும் அலைகள் ஓய்ந்து நிற்கும் குளம்போலும் காற்றற்றவிடத்தில் அசைவற்று எரியும் விளக்குபோலும் ஈசனர் விளங்கினர்.

49. பிரமகபாலக் கண்ணினின்று மேற்கிளம்பிய சோதியால், தாமரைத்தண்டு நூலினும் மிருதுவாய் விளங்கும் இளம் சந்திர கலையின் அழகை வாடும்படி செய்துகொண்டு சிவபெருமான் தவம்புரிந்தார்.

50. ஒன்பது வழிகளையும்கட்டி மனதின் சஞ்சாரத்தை அடக்கி சமாதியினால் வசமாக்கிக்கொண்ட அழிவற்றஆத்மாவென்று பெரியோர்கள் முறையிடும் தமது ஆத்துமாவை தம்மிடத்திலேயேகண்ணுற்றுக் கொண்டு சிவபெருமான் தவம்புரியலானர்.

51. அவ்வாறு தவம்புரிந்துகொண்டு மனத்தால் கூட அணுகமுடியாதவராய் விளங்கிய அச் சிவபெருமானை மன்மதன் சமீபத்தில் கண்டதும் பயத்தால் மெய் பதறி தனது கையைவிட்டு நழுவிவிழுந்த பாணத்தையும் வில்லையுங்கூடக் கவனியாதவனாய் நடுங்கலானன்.

52. அவ்வாறு அழிந்த அவன் பலத்தை தனது மேனியின் அழகால் மறுபடி மூட்டிவைப்பவள் போல் அச்சமயத்தில் பார்வதி வனதேவதைகளால் தொடரப்பட்டு அவ்விடம் வந்து தோன்றினள்.

53. பதுமராகமணியின் அழகை தனது அழகால் விலக்கிய அசோகமலர்களையும் பொன்னின் ஒளியைத்தனது ஒளியால் வென்றகர்ணிகாரமலர்களையும் முத்துகளின் மாலைபோல் விளங்கிய விந்துவாரமலர்மாலையையும் வஸந்த காலத்தில் மலர்ந்தமலர்களையே தனது ஆபரணங்களாய் அணிந்து அவ்வம்மணி வந்தாள்.

54. தனது ஸ்தனபாரத்தால் கொஞ்சம் வளைந்தவளாய் இளஞ்சூரியன் காந்திக்கொப்பான காந்தியுடன் சோபித்த வஸ்திரமுடுத்தி அவ்வுத்தமி நன்றாக மலர்நிரம்பிய பூங்கொத்தால் வளைந்த இளந்தளிர் எடுத்து நடமாடும் கொடிபோலும் காணலானள்.

55. வைக்கவேண்டிய இடமறிந்து மன்மதனால் தனது வில்லுக்கு இரண்டாவது நாண்கயிறுபோல் வைக்கப்பட்டு சோபித்துக்கொண்டிருந்த மகிழமலர் மாலையாகின்ற ஒட்டியாணத்தை அது தனதிடையை விட்டு நழுவும் பொழுதெல்லாம் தனதுகையால் பற்றிக்கொண்டு அப்பார்வதி வந்துகொண்டிருந்தாள்.

56. மணம்வீசும் தனது முகக்காற்றைக் குடிக்க ஆசையுடன் பறந்துவந்து தனது உதட்டினருகாமையில் சஞ்சரித்துக்கொண்டிருக்கும் வண்டுகளை வெருண்ட கண்களுடன் அடிக்கடி அவ்வுத்தமி விளையாட்டாகத்தான் தனது கையில் பிடித்துக் கொண்டுவந்த தாமரைமலரால் ஓட்டிக் கொண்டே வந்தாள்.

57. ஓர் அவயவத்திலாவது கொஞ்சமேனும் குறையின்றி விளங்கிக்கொண்டும் இரதிதேவிக்கும் வெட்கத்தை உண்டுபண்ணிக்கொண்டும் நின்ற அம்மாதரசியை மன்மதன் பார்த்ததும், சிவபெருமான் ஐம்புலன்களையும் என்னதான் அடக்கினவர் என்றிருந்த போதிலும் தனது காரியம் முடிவுபெற்றது என்று மறுபடியும் எண்ணலானன்.

58. உமையும் தனக்கு இனிமேல் கணவராகப் போகும் சம்புவின் இருப்பிடத்தின் வாயில் வந்து நின்றாள். அக்கணத்தில் சிவபெருமானும் தமக்குள் பரமாத்மாவை யோகக்கண்ணால் கண்டுவிட்டு தமது நிஷ்டையை முடித்தார்.

59. அதுவரையில் பாதாளஉலகத்தில் வெகுசிரமப்பட்டு மூச்சுபிடித்து தனது படத்தின்மேல் பூமியைத்தூக்கிக்கொண்டு நின்ற ஆதிசேஷன் கொஞ்சம் இளைப்பாற ஈசன் மெதுவாக தமது மூச்சைவெளிவிட்டு வீராஸனத்தை உடைத்து உட்காரலானர்.

60. அப்பொழுது நந்திகேசுவரன் அவரிடம் வந்து வணங்கி பணிவிடைசெய்ய பார்வதி வந்திருப்பதாகத் தெரிவித்தான். அவர் புருவத்தை அசக்கியதால் யஜமானுடைய உத்தரவாயிற்றென்பதை அறிந்துகொண்டு அப்பார்வதியை உள்ளே போகவிட்டான்.

61. பார்வதி தான் நமஸ்காரம் பண்ணுவதற்கு முந்தி தனது தோழிகள் தங்கள் கைகளால் செய்து கொண்டுவந்திருந்த வஸந்தகாலத்திய மலர்களை இடையே தளிர்களும் கலந்திருக்க தனது கைகளால் எடுத்து ஈசனுடைய திருவடிகளில் இறைத்தாள்.

நீலி வசீகரம்

TAMING OF THE SHREW

(217-ம் பக்கத்தொடர்ச்சி)

(ஒரு சேவகன் வருதல்.)

சே.—அம்மா! படித்தது போதுமென்றும், புத்தகங்களைக் கட்டிப்போட்டுவிட்டு வரச்சொல்லுகிறார், பெரிய எஜமானர்; நாளைக்கு உங்கள் அக்காளுக்குக் கல்யாணமல்லவா?

வநி.—உபாத்தியாயர்களே! நான் போய்வருகிறேன் (வநிதேசுவரியும் சேவகனும் போதல்.)

விஜ.—ஆனால் நானும் போகவேண்டியதுதான் எனக்குமாத்திரம்இங்கு என்னவேலை. (போதல்).

பிர.—இந்தப்பையல் ஏதோ மையல் கொண்டிருக்கிறான்போல் காணப்படுகிறான்.—வநிதேசுவரி! இந்த அற்ப எண்ணம் உனக்குத்தகாது, தகாது (போதல்.)

களம் 2. மதுரை: ரகுநாததேவன்வீட்டு முன் மண்டபம்

(ரகுநாததேவர், பொன்னம்பலதேவர், சுப்பராயன், கௌதமி, வநிதேசுவரி, விஜயராகவ உடையார், பரிவாரங்கள், வருதல்.

ரகு.—(சுப்பராயனை நோக்கி) விஜயராகவ உடையாரே! இன்றையதினம் முகூர்த்த நாளென்பதை மறந்துபோயிருப்பாரா? நாராயணத்தேவர் கல்யாணத்தை மறந்துபோய் வராமலிருக்கக்கூடிய காரணம் என்னவாகவிருக்கும்? வராமற்போனால் ஜனங்கள் என்ன சொல்வார்கள்! பரிகாசம் ஒரு பக்கம்; சேகரம்செய்தசாமான்கள் வீணாவது ஒரு பக்கம்; கல்யாணத்துக்கு வந்திருக்கும் உறவினர்கள் கைகொட்டிச் சிரிப்பார்களே! உமக்கு என்ன தோன்றுகின்றது? பெரும் அவமானம் வந்துவிட்டதே.

கௌ.—எனக்கல்லவா அதிக அவமானம்; யாரோ ஒரு பைத்தியக்காரனுக்கு என்னைக் கொண்டுபோய்த் தள்ளிவிடவேண்டுமாக்கும்! அவன் ஒரு சர்வ மூடனென்று முன்னமேயே சொன்னேன்; அதை ரூபித்துவிட்டானல்லவா? கல்யாணம் நிச்சயம் பண்ணினான்; முகூர்த்தம் வைத்தான்; கல்யாணத்துக்கு வராமலிருந்துவிட்டானே! இது என்ன போக்கிரித்தனம்? வந்து ஒருவேளை கல்யாணத்தையும் முடித்துவிட்டால், ஜனங்கள் என்னைப்பார்த்து "பைத்தியக்காரன் பெண்டாட்டி" என்று சொல்வார்களா?

சுப்:—கௌதமி! பொறுத்திரு; தேவரே! நீங்களும் பொறுங்கள்; நாராயணத்தேவர் வார்த்தைக்குக் கட்டுப்பட்டவர்; ஏதோஅவசரமான காரியத்தால் வருவதினின்றும் தடுக்கப்பட்டிருப்பார்; இன்னும் அரைநாழிகைக்கெல்லாம் வந்துவிடுவார் பாருங்களேன்!

கௌ:—என் கதி யிப்படியா இருந்தது? (கௌதமி அழுதுகொண்டுபோதல்; வநிதேசுவரியும் மற்றவரும் உடன்செல்லல்.)

ரகு:—யாருக்குத்தான்இந்தத் துக்கம் சகிக்கும்? அதுவும் கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல்போனால் அதிக துக்கம் இருக்காதா? அவன் துஷ்டையானாலும் கஷ்டத்தை யநுபவிக்க நான் சம்மதப்படமாட்டேன்.

(கேசவன் வருதல்.)

கேச:—ஐயா! ஐயா! ஒரு வேடிக்கையான சங்கதி!

ரகு.—என்னடா, வேடிக்கை? ஏதாவது பழைய கதையைச் சொல்லுகிறாயோ?

கே.—ஆமாம்; நாராயணத்தேவர் வருவது பழைய கதைதானா?

ரகு.—அப்படியானால் அவர் வந்துவிட்டாரா?

கே.—வரவுமில்லை, ஒன்றுமில்லை.

ரகு.—இப்பொழுது என்னவோ கட்டி முழக்கினையே, வந்துவிட்டாரென்று?

கே.—வந்துகொண்டிருக்கிறார், வேண்டுமானால் போய்ப் பாருங்கள்.

சுப்.—என்னடா! வேடிக்கை யென்றாயே? என்ன வேடிக்கை?

கே.—ஏன்; நாராயணத்தேவர் வருகிறார்; தலையில் ஒரு அழுக்குத் தலைப்பாகை; அதில் அநேக வர்ணமான ஒட்டுப்போடப்பட்டிருக்கின்றன; உடம்பின்மேல் போட்டிருக்கும் சட்டை எங்கே வாங்கப்பட்டதென்று தெரியாது; ஒருவேளை ஒரு குடுகுடுப்பாண்டியிடம் வாங்கியிருப்பார்; மேலோ குறைந்தது ஆயிரம் துவாரங்களுடன் ஒரு பழைய ஜரிகை வேஷ்டி போட்டுக்கொண்டிருக்கிறார்; துருப்பிடித்த கத்தியொன்று கையில் துலங்குகின்றது; அவர் ஏறிவரும் குதிரையோ, கேட்க

வேண்டியதில்லை; அதற்கு ஒரு கால் நொண்டி; ஒரு கண் குருடு, முழுக்கிழம்; மாதம் காதவழி கூடப் போகுமோ, என்னவோ? குதிரைக்கடிவாளமோ, கப்பாணிக்கயிற்றினால் ஆனது; குதிரையின் சரீரமெல்லாம் புண்; அதோடு முட்டிக்கால் தட்டி; தேவர் காலில் ஒரு காதறுந்த செருப்பும் இருக்கிறது. கூத்தில் கோமாளி வருவதைப்போல சகல ஆடம்பரங்களுடன் வருகிறார்.

ரகு.—அவருடன் இன்னும் யார் வருகிறார்?

கே.—அவருடைய சேவகன் போலவிருக்கிறது. அவனும் அவரைப்போலவேதான் வருகிறான். அவனைப் பார்த்துவிட்டால் பைத்தியக்காரனைப் பார்க்கவேண்டாம்.

சுப்.—என்னத்திற்காக இவ்வாறு வருகிறாரோ? காரணமில்லாமல் அப்படி வரமாட்டார்.

ரகு,—எப்படியாவது வந்துவிட்டுப்போகட்டும், வந்துவிட்டதே போதும்

கே.—எங்கே வந்துவிட்டார்? வரவேயில்லை.

ரகு.—வருகிறார் என்று சற்று முன்பு சொன்னாயே!

கே.—அவருடைய குதிரை வருகிறது; அதன் மீது அவர் ஏறியிருக்கிறார்.

ரகு.—ஏதடா, மடையனாகவிருக்கிறாய்; அப்படியானால் குதிரைவந்தால் அவர் வந்ததாக ஆகாதா?

கே.—ஆகுமா? எயப்பா! மனிதனும் குதிரையும் ஒன்றாமே, பெரிய அய்யாவுக்கு!

(நாராயணதேவரும் பொன்னனும் வருதல்.)

நா.—எங்கே, எனக்கு முன்வந்தவர்கள் எல்லோரும் இன்னும் வந்து சேரவில்லையா?

ரகு.—வாரும்; உம் வரவு நல்வரவாகுக.

நா.—ஏதோ அவசரத்தில் வந்துவிட்டேன்; நல்ல வேஷ்டியுடுத்திக் கொள்ளக்கூட சாவகாசம் இல்லை.

சுப்.—ஏன் இவ்வளவு நேரம் தாமதித்து வந்தீர்? நல்ல உடை உடுத்து வரவில்லையே, ஏன்?

நா.—எல்லாம் இது போதும்; இப்படியே போனால் நன்றாகவிராதோ? நான் உங்களுடன் வம்பு பேசிக்கொண்டிருக்கிறேனே! கௌதமி எங்கே?— நீங்கள் என்னைப்பார்த்து வியப்படைந்து நிற்கிறீர்களே! நான் என்ன பேயா? பிசாசா? இதுவரையில் காணப்படாத அதிசய மிருகமா?

ரகு.—ஏன், ஐயா! இன்றையதினம் உமது கல்யாணதினமல்லவா? இதுவரையில் நீர் வாராமலிருந்ததைப்பற்றி விசாரப்பட்டோம்; இப்போது நீர் இவ்வளவு கேவலமான உடையுடன் வந்திருப்பதைப்பற்றி விசாரப்படுகிறோம். இதையெல்லாம் எறிந்துவிட்டு, நல்ல உடைகளைத் தரித்துக் கொள்ளும்; இந்தக்கோலத்தைக் கண்கொண்டு பார்க்க முடியவில்லையே!

சுப்.—இவ்வளவு தாமதமேன்? இப்படி அவகோலத்துடன் வருவானேன்?

நா.—அதைச்சொல்லி என்ன காரியம் முடியப்போகிறது? சொன்னாலும் தாமதமாகும்; உங்களுக்கும் வருத்தமாக விருக்கும்; நான் சமயத்துக்கு வந்துவிட்டேனே! இதுவே பெரிய காரியமல்லவா? கௌதமி எங்கே? முகூர்த்தம் எத்தனை நாழிகைக்கு? இந்நேரம் போய்விடவேண்டாமோ? வாருங்கள் போவோம்.

சுப்:—இந்த அசங்கிய உடையுடன் உன் காதலியைப்பார்க்கக்கூடாது. எனது அறைக்குப்போய், நல் வஸ்திரங்களை உடுத்துக்கொண்டு வாரும்;

நா:—நான் மாட்டவே மாட்டேன்; இப்படியேதான் போவேன்.

ரகு:—இப்படிப்போனால், மணப்பந்தலுக்குள் நுழையக்கூடாது.

நா:—என்ன? எப்படி? அவள் என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள போகிறாளா, என்வேஷ்டிகளைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளப்போகிறாளா? நான் உடையை மாற்றவேண்டுமானால், அவளும் தன் குணத்தை மாற்ற வேண்டும். உங்களோடுநான் பேசிக்கொண்டு நிற்கிறேனே! இப்போதே போகவேண்டும். (நாராயணதேவரும் பொன்னனும் போதல்.)

சுப்:—ஏதோ காரணத்தோடுதான் இப்படி அவலக்ஷண உடை தரித்து வந்திருக்கிறார்: இருந்தாலும், மணப்பந்தலில் நுழைவதற்கு முன் நல் உடையைத் தரித்துக்கொள்ளும்படி சொல்லிப்பார்ப்போம்.

ரகு:—நான் கூடப்போய் ஏற்பாடு செய்கிறேன். (ரகுநாததேவர், பொன்னம்பலதேவர் கேசவன் போதல்.)

சுப்:—ஐயா! இனி நாம் நமது காரியத்தைக் கவனிப்போம்.—முன் சொன்னதுபோலவே யாரேனும் ஒருவனைப்பிடித்துத் தஞ்சை நல்ல நாயகஉடையாரென்று வேஷம் போட்டுக்கொள்ளச் சொல்ல வேண்டும். அவன் அதிக சாமர்த்தியசாலியாக இருக்கவேண்டுமென்றுகூடவேண்டாம்; பேருக்குமாத்திரம் ஒரு பேர் வழிவேண்டும்,

(இன்னும் வரும்.)

ஆங்கிலக் கருத்துகளுக்கு அமைந்த

தமிழ்ப்பாத்தொகை

SUITABLE TAMIL VERSES FOR ENGLISH FAMILIAR QUOTATIONS

மானிடர் எழுபருவம்.

நானிலம் யாவுமோர் நாடக சாலையே.
ஆண்பெண் அனைவரும் அதில் நடிப்பவர்தாம்
மறைவுந் தோற்றமும் மற்றவர்க் குள்ளன.
ஆயுள் நாளில் எயபல் வேடம்
எடுத்தவர் புவியில் நடிப்பவ ராவர்.
ஒவ்வொருவருக்கும் ஒரெழு பருவம் ஆம்.
கக்கிக் கதறக்கைப்புறத் தேந்தி
செவிலித் தாய்வளர் சிலைப் பருவமே
பருவங்களில் முதற் பருவமதாகும்
தூண்டாநிற்ப வேண்டா வெறுப் பொடு
புத்தகப் பையொடு நத்தைபோல் ஊர்ந்து
மினுங்கிய வதனம் சிணுங்கிச் சிணுங்கிக்
காலைப் பொழுதில் கல்விக் கழகம்
மெள்ளச்செல்லும் பள்ளிப்பிள்ளை—பின்,
காதலித்திருக்கும் காரிகை தன்னுடைப்
புருவ மாதிய புழுங்கிய மனத்தொடு
தண்பா மாலைசாற்றித் துதித்து
மட்டிலா உலைபோல் நெட்டுயிர்ப் பெய்தும்
காதல ஞகும் காளை.—அதன்பின்,
அதிசயச் சபதமும் அட்ர்புலித் தாடியும்
பேர் அழிமா வகைப்பேணும் நல் ஊக்கமும்
எதற்கும் சண்டைக் கிழுக்கும் படியாச்
சடுதியிற் கோபம் சனிப்பதுங்கொண்டு
நீர்மேற்குமிழிபோல் நிலையிலாப் புகழ்பெற
பீரங்கி வாயில் சிரங்கம் போக்கவும்
சித்தமா இருக்கும் யுத்தவீரன். பின்,
செழிப்புறு சேவற் கொழுப்பினலாகிய
பேரெழில் வாய்ந்த பேழைபோல் வயிறும்
நீர்த்தாட் சணிய நேத்திரம் இரண்டும்
வழங்கும் காலத் தொழுங்கின் படியே
நறுக்கிய தாடியும் முறுக்கிய மீசையும்
நல்லுப தேசமும் நாடறி வழக்கும்
இன்ன யாவும் இனிதுறக் கொண்ட
பண்பார் நீதிபதி. அதன் பின்னர்
தச்சற் றேகமும் கால்களிற் சோடும்
மூக்கிற் றரித்து நோக்கு கண்ணுடியும்
இருகவுள் தோலாம் இரும்பை வீழ்ச்சியும்
பாலியத் தினிது பத்திரப் படுத்திய
மேற்சோ டிரண்டும் மிகப்பெரிதாம்படி
ஒடுங்கிச் சுருங்கிய ஓரிருபாதமும்
ஆணவப் பெருங்குரல் அனைத்தையும் இழந்து
குழவியின் குறுகிய குரலினைப்போன்று
கீச்செசன ஒலிக்கும் பேச்சையே கொண்டு
தேசெலாம் குன்றிய மாசுலாம் குரூபியே
ஆறும் பருவம் ஆம். அதன் பின்னர்
பல்லும் பார்வையும் சொல்லும் சுவையும்
யாவையும் இழந்து யாவையும் மறந்து
மறுவலும் சேய் என மதித்தார் வெய்துவோன்
அடிக்கடி மாறும் இவ் அற்புத சரிதை
முடியும் இக்காட்சி யொடு முடிந்திடுமே.

SEVEN AGES OF MAN

All the world is a stage
And all the men and women merely players:
They have their exits and their entrances;
And one man in his time plays many parts,—
His acts being seven ages. At first the infant,
Mewling and puking in the nurses arms.
Then the whining school-boy, with his satchel
And shining morning face, creeping like a snail
Unwillingly to school. And then the Lover,
Sighing like furnace, with a woful ballad
Made to his mistress' eye-brow. Then a Soldier
Full of strange oaths and bearded like a pard;
Jealous in honour, sudden and quick in quarrel,
Seeking the bubble reputation
Even in the cannon's mouth. And then the Justice,
In fair round belly with good capon lined
With eyes severe and beard of formal cut
Full of wise saws and modern instances,—
And so he plays his part. The Sixth age shifts
Into the lean and slippered Pantaloon,
With spectacle on nose and pouch on side;
His youthful hose well saved, a world too wide
For his shrunk shank; and his big manly voice
Turning again toward childish treble, pipes
And whistles in his sound. Last scene of all,
That ends this strange eventful history

Is second childishness and mere oblivion ;
Sans teeth, sans eyes, sans taste, sans-every-thing,

SHAKESPEAR'S AS YOU LIKE IT : ACT II SC. 7.

இரக்கம்

பிறர் வற்புறுத்தப் பிறந்திடல் என்றல்
இரக்க மென்பதன் இயல்பாகாது.
விண்ணின் நின்றும் மண் மீதிழியும்
இனிய மழை என இழிவதில் இரக்கம்
இரண்டு விதத்தினும் ஈயும் இது நலம்
இரங்கப் படுவோன் இரங்குவோன் என்னும்
இருதிறத் தார்க்கும் ஈதருள் புரிந்திடும்
வலிமிக் காரிடம் வலிமை மிக் குள்ளது.
அரி அணைமீதமர் அரசனுக் கன்னவன்
புனைமுடி யினும் மிகப் பொருத்தம் உடையது.
அரசன் செங்கோல் அவனியில் அவனுடை
அதிகாரத்தின் ஆற்றலுக் கறிகுறி.
பயமும் மாட்சியும் பயப்பதன் பண்பாம்.
அரசர்பால் திகிலும் அச்சமும் அதில் உறும்.
இரக்கம் இக்கோலினும் ஏற்றம் மிக்குடையதே.
அரசர் மனச்சிங் காதனத் தமர்வதது.
ஈசர்க்கே அஃதியைந்த ஓர் குணம்.
நீதியோ டிரக்கமும் நிகழ்வுறுங் காலையில்
மன்னவன் ஆணையும் விண்ணிறை ஆணையாம்
ஆதலின் யூத! நீதியைப் பெறவதே
நின் வழக்காயினும் நீ நினை இதனை:
கேவலம் நியாயமே தேவன் கைக்கொளின்
நம்மவர் எவருமே நற்கதி காண்கிலம்.
இரங்கி மன்னிக்க நாம் ஈசனை வேண்டுவோம்
அதேவேண் டுகோள்நாம் அனைவரும் மற்றவர்க
கிரக்கச் செயல்செய இனிதுகற் பிக்குமே.

MERCY

The quality of mercy is not strained ;
It droppeth as the gentle rain from heaven
Upon the place beneath : It is twice blessed ;
It blesseth him that gives and him that takes :
It is mightiest in the mightiest : it becomes
The throned monarch better than his crown :
His sceptre shows the force of temporal power,
The attribute to awe and magesty,
Wherein doth sit the dread and fear of kings
But mercy is above the sceptred sway
It is enthroned in the hearts of Kings
It is an attribute to God himself,
And earthly power doth then show likest God's
When mercy seasons justice. Therefore Jew'
Though justice be thy plea, consider this—
That in the course of justice none of us
Should see salvation : We do pray for mercy
And that same prayer doth teach us all
To render deeds of mercy.

உயர்ந்தோரை உலகறியாது.

அளவிடவும் முடியாத ஆழ்கருங் கடலினுக்
கடியினுட் குகையினுள்ளே
அதிசுத்த மானபிர காச ஒளி உமிழ்கின்ற
அரியமணி பல உறுதல்போல்,
ஒளிய புகழோடுதித் தந்தமது பெருமையும்
உறைவிடமும் ஒருவராலும்
உணரமுடி யாதபடி மறைநிலையில் உத்தமர்கள்
உறைவர் பலர். அல்லாமலும்,
அளிமுரலும் மலர்கள்பல அனுபவிப்பார் இன்றி
அறியாத பாழ்வெளியினில்
அழகுவாம் மணம் ஆதி யாவுமே வீணு
அலர்ந்து பின் வாடும் அதுபோல்,
எளிய நிலை ஜன நிரையில் எய்திய ஞற்றம
திருப்பிடம் தகைமை ஆதி
எவரும் அறிந்து பயன் எய்தமுடியாதநிலை
இருப்பர் பல பெரியோர்களே.

Full many a gem of purest ray serene
The dark unfathomed caves of ocean bear
Full many a flower is born to blush unseen
And waste its sweetness in the desert air

——Gray's Elegy in a Country Church-yard

ஆராய்ச்சிமுறை

பொங்கு திரைக் கடல்மேல் புன்துரும்பே தோன்றவேபோல்
இங்கெவர்க்கும் தோன்றும் இழிகுணமே—அங்குயர்ந்த
முத்தெடுக்க வேண்டுபவர் மூழ்குவது போல் முயலின்
உத்தமகு ணம் வெளியாகும்.

Errors like straws upon the surface flow
He who would search for pearls must dive below.

—*Dryden.*

ம. கோபால கிருஷ்ணய்யர்.

சிறுவர்க்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

பூனையும் நரியும்:—

பெருவன நடுவில் ஒருமரத் தடியில்
நரியும் பூனையும் நட்புற் றிருந்தழி,
மாநரி அந்தப் பூனையை நோக்கி,
'அன்பா! உனக்கோர் ஆபத் துற்றுழி
எவ்வழி யாலே அவ்விடர் நீக்குவாய்?
மனதுவந் துரை' யென வினவ, அப்பூனை
'மறுவழி யறியேன், மரமிசைத் தாவும்
ஒருவழி யாலே உய்குவன், தவரின்
இயம னுலகே எனக்கிடம்,' என்றது.
புன்னரி பின் அப் பூனையை நோக்கி
எனது திறமை வேறெவருக் குள்ளது.
எவ்வளவிடர்கள் எனக்கு வந்தாலும்
அவ்வள வுக்கு மஞ்சேன், பற்பல
உபாயத்த கற்றுளேன் அபாயத்தை' என்றது
இப்படி இவைகள் செப்பிடும் பொழுதில்
ஒப்புயர் வில்லா ஒருமுதற் கடவுள்
பரிசோ திக்கும் படியே போலச்
சிலைபிடி வேடன் பலநா யொடுவர,
மரமிசைத் தாவி மறைந்தது பூனை.
பலபல வழியும் படர்ந்து பார்த்தும்,
ஒருவழி யேனு முதவா தொழிய
கருநரி உள்ளங் கலங்கி யிறந்தது

ஒருவழி பிடித்தோ ருய்தகல்,
மருவுவ ரென்பது மறை பொருளாமே.

இராமாயண ஸாரம்.—இராமர்இலங்கையிலிருந்து அயோத்திக்குத் திரும்பிவந்ததும் கைகேயியை நோக்கி

* பெற்றகோ னன்பும் நீதரு பரதன்
    பெருமையும் மாருதி திறமும்
† எற்றரு வான ராதிப னட்பும்
    இலக்குவன் மிக்கபத் திமையும்
உற்றஜா னகியின் மெய்மையு மென்வலியும்
    ‡ ஒன்னலார் பகைமயி லியல்பும்
மற்றவு மறிந்தே னுன்றனால் தாயே
    வந்தனம் நின்திரு வடிக்கே

என்றார்.

ಃ

கோபம் சண்டாளம்.—பிராமண ஸந்யாஸி ஒருவர் தமது ஆசிரமத்திற்கு ஏற்பட்ட ஒழுங்கின்படி தவறாது நடந்துகொண்டுவந்தார். இப்படி கொஞ்சகாலம்நடந்து வந்தபடியால் அவருக்கு தம்மைப் போன்ற மேன்மை உடையவர் ஒருவரும் இல்லை என்று கர்வம் மெதுவாக அதிகரித்துக்கொண்டு வந்தது. நாளடைவில் அவருக்குத் தாம் மோக்ஷம் அடையும் தருணமாக இருப்பதாகத் தோன்றிக்கொண்டேயிருந்தது. ஆதலால் ஆசாரவிஷயத்தில் இவர் சிறப்பு உடையவராக இருந்தபோதிலும் உண்மையாக இவர் சிறப்பு அடையவே இல்லை. இவரது காயக்லேசாதிகள் முதலான கஷ்டங்கள்யாவும் சாம்பலில்பெய்த ஆகுதிபோல வீணாயின. வெளி ஆசாரத்திற்கு விரோதமாக யாராவது நடந்துகொண்டால் கோபம் அதிகமாக வருவதேஇவருக்கு வழக்கமாக விருந்தது.

ஒருநாள் காலையில் இந்த ஸந்யாஸி மிகுந்த பக்தியுடன் ஒருதடாகத்தில் மூழ்கி அருகாமையிலிருந்த செடிமறைவில் கண்ணைமூடிக்கொண்டு கடவுளைத் தியானம் செய்துகொண்டிருந்தார். அவ்வூருக்குப் புதிதாக வந்த வண்ணான் ஒருவன் இந்த ஸந்யாஸியின் மனோநிலை முதலியவைகளை அறியாதவனாய் அன்றுகாலை அந்த தடாகத்திற்குத் தனது துணிகளைத் தோய்க்கவந்தான். அப்பொழுது அருகாமையில் ஸந்யாஸி இருப்பதுகூட அவனுக்குத் தெரியவில்லை. ஆகையால் அவன் ஸாதாரணமாக தனது துணிகளைத்தோய்க்கத்தொடங்கினான். துணியிலிருந்து வெளியேறிய தண்ணீர் திவலைகள் செடிமறைவிலிருந்த ஸந்யாஸியின்மேல் விழுந்தன. அவர் நிஷ்டைகலைந்து நம்மை அசுத்தப்படுத்திய வண்ணானைக் கண்டு அதிக கோபங்கொண்டு 'அடே! சண்டாளா! என்னை ஏன் இவ்வாறு அசுத்தப்படுத்தினாய்?' என்று சீறி அவனை நன்றாக அடித்துவிட்டு, தடாகத்தில் ஸ்நானஞ்செய்யத்தயாரானார். அப்பொழுது மிகுந்த வணக்கத்துடன் பதில் ஒன்றும் சொல்லாது வண்ணானும் ஸ்நானத்திற்கு ஆயத்தமானான். இதைக்கண்ட ஸந்யாஸி 'என்னை அசுத்தப்படுத்திவிட்டு என்னோடு நீயும் என்ஸ்நானத்திற்கு ஏற்பாடு செய்கிறாய்?' என்ற கோபம்தணிந்ததும் வண்ணானைக் கேட்டார். அதற்கு அவன், 'நான் அசுத்தமாகிவிட்டேன் என்னை சுத்தப்படுத்திக் கொள்ள ஸ்நானம் செய்யப்போகிறேன்' என்றான். 'நான் உன்னைத் தொட்டதால் உனக்கு அசுத்தி ஏது?' என்று ஸந்யாஸி கேட்க. அதற்கு வண்ணான் 'நீங்கள் ஸாதாரணமாகத் தொட்டால் எனக்கு யாதொரு பாதகமும் இல்லை. நீங்கள் கோபாவேசத்தோடு என்னைத் தொட்டபடியால், எனக்கு சண்டாளனைத்தொட்ட தீட்டு வந்துவிட்டது நான் ஸ்நானம் செய்து என்னை சுத்திசெய்து கொள்ளப்போகிறேன்,' என்ற சொல்லி அவன் ஸ்நானம் செய்யத் தொடங்கினான் ஸந்யாஸி படித்தவராகையால் வண்ணான் 'கோபம்சண்டாளம்' என்று குறிப்பாகக் கூறியதன் உண்மையை உணர்ந்து 'கோபத்தோடு அடித்த நானே சண்டாளன்! நான் என்ன அடித்தபோதிலும்பொறுத்துக்கொண்டிருந்த வண்ணான் மேன்மையே மேன்மை!' என்ற தம்முள் துக்கித்துக்கொண்டு அன்றுமுதல் ஸந்யாஸி தமது மனதை உள்ளபடி அடக்கமுயன்றார்.

---

* பெற்ற அரசன் † வானரர்க்ரச‌ன் ‡ பகைவர்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

"நெய்யுறுவிளக்கனாய்" என்றார் ஹநுமார் ஸீதையை அசோகவனத்திற் கண்டபொழுது. அதாவது நெய்யானது விளக்கிற்கு ஜீவாதாரம். நெய்யுள்ளவரையும் விளக்கெரியும். பின்பது அவிந்துவிடும். அதுபோல் மனைவிக்கு உயிராக இருப்பது அவள் கணவன்தான். அவன் இருக்கும்வரை இவளுக் கழிவில்லை. அவனால் நிலைத்தவள். அவன் நிலைமையில் வாழ்வதுதான் அவள் இயற்கை. நெய்யின்றி விளக்கு, எரியமுடியாது. கணவனன்றி மனைவிக்கென்று மிருக்கமுடியாது. அவன் தான் அவளுக்கு முதல்வன். அவனை வழிபடல்தான் அவளுக்கு வாழ்க்கை.

* * *

நமது வாழ்க்கை வீண் வாழ்க்கை அல்ல. நமது கல்யாணமும் வெறும் உலக இன்பத்திற்கல்ல. மனைவியுங் கணவனும் கருத்தொருமித்து தங்களிடத்தில் கடவுளைக் காணத்தான் நாம் மணம் செய்துகொள்வது. இதுதான் நமது தர்மம். அதனால்தான் மனைவிக்கும் தர்மபத்நி என்று பெயர். ஆத்மைக்கியமாகி சாவிலும் வாழ்விலும் பேரின்பசுக மனுபவிப்பதுதான் நமது தர்மம்.

* * *

மணம் செய்துகொள்வது தனது கணவனுடன் கலந்து தர்மஸ்தாபனம் செய்வதற்குத்தான். ஒருவனையே தனது கணவனாகபவித்து அவனுந்தானுமொன்றாக வாழ்தலே உத்தமப்பெண்ணின் குணமாகின்றது. தான் ஒருவன்மீது அன்புகொண்டு அவனை அடையமுடியாவிடினும், அன்றி தனது கணவன் இறந்துவிடினும், கணவனென்ற லக்ஷியத்தையே நோக்கமாகக்கொண்டு மாற்றானைக்கூடாது இருத்தல்தான் மடைமைகுணத்தின் பெருமையை விளக்கும். இக்காரியங்களில் எவ்வித கஷ்டம் வந்தாலும் தன் நெறியினுடைய நிலையை நிறுத்த தன் உயிரையும் அளிக்க தயாராகவிருப்பவள்தான் பெண்களிற் பெரியவளாகின்றாள்.

* * *

ராஜபுதன நாட்டில் உதயபுரத்தை யாண்ட ராஜாதிராஜன் ஆகிய சித்தூர்ராணாவென்பவனுக்கு குழந்தை ஒன்றிருந்தது. அழகிற் சிறந்தது. வயதிற் குறைந்தது. புத்தியில் நிறைந்தது. அதற்கு கிருஷ்ணகுமாரி என்று பெயர். இக்குழந்தை திநே திநே வளர்ந்து வஸந்தகாலபுஷ்பம்போல் கண்டார் கண்ணையும்மனத்தையும் பறிக்கத்தக்க அழகொடு விளங்கியது. வயது பதினாறாகி மங்கைப்பருவமடைந்து மாந்தளிர்போல் மெலிந்த அழகோடு திகழ்ந்தனள்.

* * *

ராஷ்ட்ரத் தலைவனாகிய ஜோதிபுரநாட்டுத்தலைவனுக்கிவளை பாணிக்கிரஹணம் செய்யநிச்சயித்தார். அதற்குள் அவனு மிறந்தான். ஆனால் கிருஷ்ணகுமாரி மனம் முழுதும் அவன் ஒருவன்மேல்தான் நிலைத்திருந்தது. இவளை மணக்கப் பலபேர் மோஹங்கொண்டனர் கொண்டாலென்னபிரயோஜனம்? தான்கொண்ட நிலையினின்று கிருஷ்ணகுமாரியின் மனம் கீழ் இரங்கவில்லை. தான் எவன்மேல் அன்பு கொண்டாளோ அவன் உடலைத் தான் காணாவிடினும் அவனுடைய ஆத்மாவிடத்தில் ஐக்கியமாக மனங்கொண்டுவிட்டாள். இதிலுமுயர்ந்த செயலுமுண்டோ?

* * *

யார்தான் பெண்பால்வைத்த மோஹத்தால் கஷ்டப்படாதவர்? ராஷ்ட்ரத்தலைவன் இறந்ததும் கிருஷ்ண குமாரியை ஜயபுரத்தரசன் மணம் புரிய விரும்பினான். அதுவும் பிரயோஜனமில்லை. ஜோதிபுர (Jodhpur)த்திற்கு மன்னனாகிவந்த மானஸிம்ஹன் பெண்எனக்குத்தான்சேரவேண்டியதென்றனன். "ஜோதிபுரநாட்டின் அரசிற்கு அவள் உரிமையுடையவளேயன்றி வேறெதற்கு அவளிடத்து ஸம்பந்தமில்லை. அவ்வரசுரிமையைப்பூண்ட என்னை தான் மணக்கவேண்டு"மென்றனன்.

* * *

உறவினரையும், உற்றவரையும் ஒன்றாக்காது நிற்கவருவது காமம் என்று எல்லார்க்கும் தெரிந்த விஷயம். முன்பு ஓர் பெண்ணை அடைய வாலியும் ஸுக்ரீவனும் சண்டையிட்டனர். ஸுந்தோபஸுந்தரும் பிரிந்து சண்டைசெய்யலானார். இதெல்லாம்புராணகதை. இப்பொழுதுகிருஷ்ணகுமாரியை அடைய ஜயபுரத்தரசனும் ஜோதிப்புரத்தரசனும் வாதத்தைவிட்டு சண்டையிட ஆரம்பித்துவிட்டார்கள்.

* * *

சண்டையிடுபவரைக் கண்டால் பார்ப்பவருக்குக் கொண்டாட்டம். அவரைத் தூண்டித்தூண்டிவேடிக்கைசெய்வதுதான் காண்பவர் ஸ்வபாவம். காண்பவருக்கென்னகஷ்டம் படுபவருக்குத்தானே அது தெரியும். இதனால் ஒருவித லாபமும் அடையலாமென்னும் எண்ணம் வந்துவிட்டால் சும்மாவும் இருப்பார்களா?

விசித்ரநாட்டரச னிவர் சண்டையைக் கவனித்தான். மஹா சந்தோஷம் கொண்டான். இவர்களை சண்டையில்விட்டு நாட்டைத் தான் அடையவேண்டும் என்ற கெட்டஎண்ணம் அவன் மனதிற் குடிகொண்டது. கெட்டவனுக் கநேக உபகாரணங் களகப்படுவது உலகத்தில் ஸகஜம். இவனோடு துருக்கி அரசனாகிய அமீர்கானும் சேர்ந்தான். இவரிருவர்கள் ஒருசமயத்தில் ஜயபுரமன்னன் பக்கம், மற்றொருவேளை ஜோதிபுரமன்னன் பக்கமும்சேர்ந்து இவர்களைத் தூண்டிக்கொண்டு தரித்திரதிசைக்கு வரும்படியாகச்செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்.

* * *

உலகத்தில் தன்னுடைய வலிமையைக்காட்டிலும் எதிரிவலிமையாயிருக்கும்பக்ஷத்தில்எதிரியைவிட்டுவிட்டு தன் வலிமையை எங்கு காட்டமுடியுமோ அங்குகாட்டுவது வழக்கம். அல்லது தாங்களிருவரும் ஒன்றுகூடி வேறோர் எளியனைக் கெடுக்க நினைப்பது ஸ்வபாவம்.

* * *

தமக்குக் கேடுவருவதாக ஏற்பட்டுவிட்டால் தாங்கள் எதற்காகப் பிரயாசைப்படுகிறார்ளோ அதற்கு அழிவுவந்தாலும்வரட்டுமென்றுகொண்டு கடைசியாகத் தாம் பிழைக்க வழி பார்ப்பதும் மனுஷ ஸ்வபாவமே அன்றி வேறொன்றுமன்று. எவ்வாறேனும் தாம் பிழைக்க வேண்டுமென்பதுதான் அவர் கவலை. மற்றொன்றுமவர் மனதிலேறாது.

* * *

விசித்ர நாட்டரசனும் அமீர்கானும் தம்மை கெடுக்க முயல்வதை இருவரும் கண்டுவிட்டீர். "நமது நாடும் நம்மை விட்டகன்றிடும்படியாக இவ்வஞ்சகர் நம்மை எளி வேடிக்கைப்பார்த்து கொள்ளையோட நினைத்திருக்கிறார். நாம் நமது பகைமையை இவ்விஷயத்தில் விட்டுவிடவேண்டியது. மேல் நடத்தவேண்டியதைப் பார்க்கவேண்டு" மென்றான் ராஷ்ட்ரத்தலைவன். "ஆம்" என்றான் ஜயபுரத்தரசனும்.

* * *

தமக்கு அழிவை யுண்டாக்க நின்ற நிமித்த மிதுதான் என்று ஒருவன் கண்டுவிட்டால் அந்நிமித்தத்தை ஒழிக்கப்பார்ப்பது ஸ்வபாவம். இதில் அவன் கொண்ட எண்ணம் ஸரியோ, அதுவில்லையோ என்றவன் எண்ணுகிறதில்லை. கோபம் ஒன்றுதான் அவன் மனதில் குடிகொண்டிருக்கும். அதிலிருந்து க்ரோதம் கொழுந்துவிட்டு ஓடி கடைசியாக தனது மனதில் எதை நிமித்தமாக எண்ணி இருக்கிறானோ அதை எரித்துவிடும்.

ராஷ்ட்ரத்தலைவன் கடைசியாக யோசனைசெய்தான் "ஸரிதான். நாம்இவ்வாறேன் தொல்லைப்படவேண்டும்? எனக்கும் வேண்டாம். உனக்கும் வேண்டாம். அவளும் உயிரோடிருக்கவேண்டாம். அவளைக் கொன்றுவிடுவது தான் நமது வேலை." என்று கூசாது சொன்னான். இருவருமாய்ச்சென்று அவள் தகப்பனிடம் அவளைக்கொல்லுவதாகச்சொன்னார்கள். அல்லது அவனையே கொன்றுவிடுவதாகச் சொன்னார்கள். ஒன்றும் தோன்றாமல் திகைத்தாகட்டுமென்று விட்டான் தகப்பனும்.

* * *

லக்ஷிய மொன்றுக்காக உழைத்து வாழ்தல் பெருமை என்பது யார்க்குத்தான் தெரியாது. ஓர் பெண் தன்கணவனாக ஒருவனை பவித்து அவனையேலக்ஷியமாகவாழ்தல்தான் பாதிவிரத்தியம் என்றுசொல்லப்படும். ஒருவனை மணஞ் செயதுக்கொள்வதாக விருந்து அது முடிவதற்குள் அவனுமிறந்திட, அப்பொழுதும் அந்த லக்ஷியம்விடாது வாழ்தலினும் பெருமையுண்டோ? அவளொருவனையே எண்ணமாகக்கொண்டு அவனைத் தன்னிதயத்துள் கலக்கவேண்டுமென்பவளுக்கு அவனை அடைவது தவிர வேறேதேனும் தோன்றுமா? அவளுக்கு ஒரேவழிதான் தெரியும்; அது பாதிவிரத்யம். அவ்வழியிற் போக ஒரே வெளிச்சம்தான் சொல்ல முடியாப் பிரகாசத்தோடு விளங்குவது. அதுதான் தன் நாயகன். அவ்வெளியுள் தானுங் கலப்பதுதான் அவளுக்குத் தர்மம்.

* * *

தகப்பன் தனக்கு விஷங்கொடுப்பதாக அறிந்த கிருஷ்ணகுமாரி தகப்பனருகேவந்தாள் "என்னப்பா! நானிருப்பதால் உமக்கு பலவிதத்திலும் கஷ்டம். எனக்கும் கஷ்டம். இவ்வுலகு எனக்கிருக்க இடமல்ல. எனக்கு என் மனோநாயகனை இந்த சரீரத்தைவிட்டுக் காண ஆவலிருக்கிறது. நீங்களிப்பொழுது கொண்டவழி எனக்கு நன்மையே பயக்கும். எல்லார்க்கும் நன்மை பயக்கும். சொல்லுவதற்கேன் அஞ்சுகிறீர். உமது கையிலிருக்கும் விஷத்தைக் கொடும்" என்று தகப்பன் மறைத்து வைத்திருந்தவிஷத்தைப்பிடிங்கி அருந்தினாள். யோகநித்திரையில் தன் நாயகனோடு உள்ளங்கலக்க நிலைத்ததுபோல் கீழ்வீழ்ந்து மயங்கிவிட்டாள்.

* * *

ஹா! கிருஷ்ணகுமாரி! நீயே ராஜபுத்ரி, நீயே தீரமுடையவள்! உன்னுடைய மனோபவம் இக்காலத்து கன்னியர் மனத்தில்பவித்து அதை மேன்மைபடுத்துவது என்றோ?

வா. சேஷகிரிசாஸ்திரி.

விசேஷ வர்த்தமானங்கள்

GENERAL NEWS

பாதரஸக் குமிழிகள்.—தண்ணீரில் குமிழிகள் நாம் எளிதில் உண்டாக்கலாம். அவ்வளவு எளிதில் ரஸத்தில் குமிழிகள் உண்டாக்க முடியாது. இவ்வாறு செய்வதற்கு சற்றேறக்குறைய 6-அங்குலம் உயரமுள்ளதோர்கண்ணாடிப்பாத்திரத்தில் ½-அங்குலம் ஆழம் பாதரஸத்தை விடவேண்டும். அந்தப்பாத்திரத்தை அதிவேகமாக தண்ணீர் வெளிவரும் குழாயின்கீழ்க் கொண்டுபோய் வைத்து அதைத்திறந்துவிடவேண்டும். முதலில் பாத்திரம் நிறையும்; பின்பு தண்ணீர் பாத்திரத்திலிருந்து பீரிட்டு அடித்துவெளியே விழுந்தோடும். இப்படியாவதற்கு முன்னமேயே தண்ணீர்விழும் வேகம் தகுந்தபடியிருக்குமாயின் சிறு ரஸக்குமிழிகள் பாத்திரத்துள் இருக்கும் தண்ணீரில் சவுக்காரக்குமிழிகள் மிதப்பதுபோல மிதக்கத் தொடங்கும். தண்ணீரில் முழுகிப்போகும் தன்மையை உடைய ரஸம் இவ்வாறு மிதந்து ஓடுவது பார்வைக்குமிகுந்தவேடிக்கையாகவிருக்கும். தண்ணீர்விழும்அதிகவேகத்தால் வாயுவும் ரஸத்தின் உள்பாகம்வரையில் கொண்டு போகப்பட்டு ரஸக்குமிழிகளை உண்டாக்குகின்றது. ரஸப்பையுள் இவ்வாறு காற்றுபுகுந்து கொண்டதும் அது இலேசாகத் தண்ணீரில் மிதந்து ஓடுகின்றது.

*
* *

தண்ணீர் தூரதிருஷ்டிக் கண்ணாடி:—உலகில் நீர்பாகம் நிலபாகத்தைவிட இரண்டு மடங்கு அதிகமாக இருக்கிறது. இந்தபாகத்தில் இயற்கையாக அமைந்துள்ள அநேக அற்புதங்கள் மறைந்துகிடக்கின்றன. இவ்வற்புதங்கள் எவ்வளவு ஆழத்தில் இருந்தபோதிலும் அவைகளையும் எளிதில் நன்றாய்க் காண ஸஹாயமாக இருக்கும்படியான ஓர் தண்ணீர் தூரதிருஷ்டிக்கண்ணாடி ஒன்று கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. இதன் ஒரு நுனியை தண்ணீருள் தோய்த்துவிட்டு மற்றைய நுனியுள் நோக்கினால் ஸமுத்திரத்தில் அதிக ஆழத்திலிருக்கும் வஸ்துக்கள் யாவும், தெளிவாக நமது கண்ணுக்குப் புலப்படும். மீன்பிடித்து விற்பதையே வியாபாரமாகக்கொண்டிருக்கும் நார்வேமுதலியதேசங்களில் செம்படவர்கள் இந்தக்கண்ணாடியின்மூலமாக மீன் கூட்டங்கள் இருக்கும் இடத்தையும், புதிய மீன்களையும் கண்டுபிடித்துத் தமது வியாபாரத்தை விருத்திபண்ணிக் கொள்கின்றனராம். அதிகப்பணம் செலவழிக்காமலே இந்தக் கண்ணாடியை உண்டாக்கிவிடலாம். முதலில் பெய்குழலைப்போன்ற அகன்றவாயும் குறுகல்வாயும்உடைய ஓர் தகரக்குழாய் செய்யவேண்டும். இதன் நீளம் 4 அல்லது 5 அடி இருக்கவேண்டும். தண்ணீருள் தோய்க்கும் வாயின் குறுக்களவு 8 அல்லது 10 அங்குலம் இருக்கவேண்டும். கண்ணருகில் இருக்கும்பாகம் 6 அங்குலம் குறுக்களவு உடையதாக இருக்கவேண்டும். அடிவாயின் அருகில் 4 அல்லது 6 ஈயகுண்டுகள் ஒட்டவைத்திருக்கவேண்டும். இவைகளால் இந்த யந்திரம் தண்ணீரில் கொஞ்சம் ஆழ்ந்து நேராக மிதக்கும். தகரப்பெய்குழலுள் கருப்புவர்ணம் போட்டிருக்கவேண்டும். அகன்றபாகத்தில் ஸாதாரண கண்ணாடி ஒன்றைப் பதிக்கவேண்டும். இது முடிந்ததும் இதை உபயோகப்படுத்தலாம். இஃதேமாதிரியாக ஓர் படகடியில் கண்ணாடிவைத்தால் படகோட்டும் சுகத்தோடுகூட தண்ணீருள் இருக்கும் அற்புதங்களையும் கண்டு ஆனந்திக்க நமக்குத் தருணம் வாய்க்கும்.

* *
*

அற்புதத் தோற்றங்கள்.—(1) ஓர் காகிதத்தில் ஓர் பட்சிக்கூண்டைப்போன்ற ஒரு படத்தை எழுதுங்கள். அதன் அருகில் வெளியில் ஓர் சிறுபட்சியையும் எழுதுங்கள். இரண்டிற்கும் இடையில் ஓர் ஒழுங்கான சிறு அட்டையை நிறுத்தி அதன் மேல்பாகத்தில் உமது மூக்கைவைத்து கவனித்துப் பாருங்கள். கூட்டினுள் பட்சி புகுந்துவிட்டதாகத் தோன்றும்.

*
* *

(2) கண்ணாடிக்கு எதிரேநின்றுகொண்டு உமது இடதுகண்ணை மூடிக்கொள்ளும். இடதுகண்ணின் பிரதிபிம்பத்தின்மேலே விழும்படியாக கண்ணாடியின்மேல் உமது வலதுகைச் சுண்டுவிரலை வையும். அசையாது இடதுகண்ணைத் திறந்து வலதுகண்ணை மூடிக்கொள்ளும். உடனே உமது விரலை நீர் அசைக்காதிருந்தபோதிலும் அது உமது வலதுகண்ணின் பிரதிபிம்பத்தை மறைப்பதாகத் தோன்றும்.

*
* *

இங்கிலாந்திய பெண்களின் நிலை.—இங்கிலாந்து தேசத்தில் சற்றேறக்குறைய 5,000,000 பெண்டுகள் தாமே தொழில்செய்து உழைக்கின்றனராம்.

இவர்கள் செய்யும் தொழில்களின் விவரம் பின்வருவன:—

வீடுகளில் வேலைசெய்பவர்கள் ...	2, 000, 000
நெசவுசாலைகளில்	867, 000
உடுப்புகள் உண்டாக்குவதில் ...	903, 000
வியாபாரத்தில்	80, 500
நில புலங்களில்	100, 000
குமாஸ்தாவாக	55, 784
உபாத்தியாயராக	200, 000
பாடகர்களாகவும் நடிப்பவர்களாகவும்	44, 000
சிகித்ஸை உபகாரிகளாக ...	79, 000
வைத்தியர்களாக	292

இங்கு காட்டியதைப்போல நமது பெண்டுகளும் வேலைசெய்து பிழைக்கவேண்டும் என்பது எம் கருத்தல்ல. இவ்வாறு வேலைசெய்து பிழைக்கும்படி வந்தால் அங்குள்ள பெண்டுகளுக்கு எவ்வளவோ ஆபத்துக்கள் எல்லாம் உண்டாய்க்கொண்டிருக்கின்றன. இதனால் நமது பெண்டுகள் தெரிந்துகொள்ளவேண்டியது யாது எனில் அவர்களைப்போன்ற மற்றைய தேசத்தியப்பெண்கள் தமது காலத்தை வீணாகக் கழிக்கவில்லை என்பதும், அதுபோல தாமும் பிழைப்புக்காக இல்லாமல்போனாலும் தமக்கும், தம்மைச் சேர்ந்த புருஷன், பிள்ளைகள், ஸஹோதரர்கள் முதலிய பந்து மித்திரர்களுக்கும் உபயோகமாகக்கூடிய வேலைகளைச் செய்வதில் தமது காலத்தைக் கழித்து மற்றை தேசத்தியப் பெண்களைவிட ஸுகமாக வாழ முயலவேண்டும் என்பதுமே.

* * *

புதிய அச்சுவார்க்கும் யந்திரம்.—பங்காளதேசத்தில் பிஸ்லி என்ற சிறந்த பண்டிதர் ஒருவர் அச்சு வார்க்கும் யந்திரம் உண்டாக்கியிருக்கின்றார் அதில் 26 ஆங்கில எழுத்தையும் ஒரேதடவையில் வார்த்து முடிக்கலாம். அது மிக அற்புதமாகக் காணப்படுகிறது. இந்த யந்திரத்தை அவர் மேல்மேலும் ஒழுங்குபடுத்தி அநேகவிதமான ஆங்கில எழுத்துக்களையும் ஒரே தடவையில் வார்க்கவேண்டியதற்கு ஏற்பாடுகள் செய்துவிடுவார். இந்த புதியயந்திரத்தில் ஒருநிமிஷத்திற்கு 180,000 சேர்ந்த எழுத்துக்கள் வார்க்கலாம். முற்கூறிய சிறிய யந்திரம் சீமையில் இப்பொழுது இருக்கின்றது.

* * *

மரணரகஸியம்:—அமெரிக்காவில் ஓர் சிறந்தவைத்தியர் தாம் பார்த்த 15,000 மரணங்களிலிருந்து பின்வரும் தீர்மானங்களுக்கு வந்திருக்கிறார்.

1. கெட்டவர்கள் மரணத்துக்குப் பயப்படுவதில்லை.

2. மரணம்வரும் தருணம் அறிந்து சொல்வது கஷ்டம்.

3. 100-க்கு 99 மரணங்களில் ஓர்வித கஷ்டமுமிராது.

4. மரணத்திற்கு கொஞ்ச நாழிகைக்கு முன்பாகவே கஷ்டங்கள் யாவும் நின்றுவிடுகின்றன

5. இறப்பவர்களுக்கு எல்லாம் நீடித்துவாழவேண்டும் என்ற ஆசை காணப்படுகிறது.

6. மரணத்திற்கும் பின்பு வாழ்க்கை உண்டு என்ற நம்பிக்கை இல்லாமல் இறப்பவர்களே இல்லை.

7. மரணம் வரும் தருணத்தை நோஞ்சம் தள்ளி மாற்றினாலும் மாற்றிவிடலாம்.

8. மரணம் தூங்கத் தொடங்குவதுபோலவே காணப்படும்

* * *

தொழில்களின் சிறப்பு.—ஐரோப்பாதேசத்தில் பொதுவாக வியாபாரம் முதலிய தொழில்களை மிகச் சிறப்பாக அரசர்களும் கொண்டாடுகிறார்கள் என்பது பின்வரும் உதாரணங்களிலிருந்து வெளியாகும். ஜர்மனி அரசர் ஸொந்தமாக பீங்கான்கள் உண்டாக்கும்சாலைகள் வைத்து அதில்தாமே வேலையாளிகள் நியமித்து, வேலை வாங்கிவருகிறார். இதிலிருந்து அவருக்கு 10, 000 பவுன் லாபம் வருஷம் ஒன்றுக்கு வருகிறதாம். ஸெர்வியா தேசத்தில் அரசர் பீட்டர் என்பவர், ஒரு அம்பட்டன் சாவடி வைத்திருக்கிறார். ஸ்வந்தமாக ஓர் மருந்து கண்டுபிடித்து வியாபாரம்செய்கிறார். தம் பணத்தினாலேஓர் மோடார் வண்டியையும் வைத்துநடத்துகிறார். வேறொரு அரசன், வெண்ணெய், முட்டை முதலியவைகளில் வியாபாரம் செய்கிறாராம். மேலும் அவர் ஓர் செங்கற்சூளை நடத்துகிறார். வுர்டம்பர்க் அரசர் தமது ராஜ்யத்தில் இரண்டு சாப்பாட்டுச்சாவடிகள் தமது மேற்பார்வையின் கீழ்வைத்து வருஷத்தில் 10,000 பவுன் ஸம்பாதிக்கின்றார். ஆஸ்டிரியா சக்கிரவர்த்தி சீனபீங்கான் உண்டாக்கும்ஓர் சாலையைநடத்துகிறார். ஸாக்ஸனி அரசரும் இவ்வாறே செய்கின்றனராம். பெல்ஜியம் அரசராகிய லியோபால்ட் காங்கோராப்பர் வியாபாரத்தில் ஏராளமாகபணம் போட்டிருக்கின்றனராம் அவருக்கு இப்பொழுது 100-க்கு20 லாபம் வருகின்றதாம். வில்லாஎன்ற ஓர் ராணி பத்திரிகை ஒன்றுநடத்துகிறாளாம். அவள்இப்பொழுது இரண்டு பெரியஊர்களில் புத்தகசாலைஏற்படுத்தியிருக்கிறாள். போர்ட்டுகல் ராணி லிஸ்பன் நகரத்தில் ஓர்மருந்துக் கடை ஏற்படுத்தி இருக்கிறாள். முற்கூறிய தொழில்களைப் போல இது லாபத்தை உத்தேசித்துச் செய்வதல்ல. இதை அவள் தர்மத்திற்காகவே செய்து வருகிறாள். ஆதலால் ராணியே மருந்து சேர்க்கும் ஸமயங்களில் அவளே மருந்துச்சீட்டும் எழுதிக் கொள்வது வழக்கமாம்.

இதை கவனியுங்கள்! இதை கவனியுங்கள்!!

சுதேசி லோட்டஸ் சோப்

என்பது என்ன?

கடைத்தெருவுகளில் எங்கும் அகப்படுகிறது,

இந்தியாமுழுதும் இது பிரசித்தமானது

மிக சுத்தமானது மிக சரசமாகக் கிடைக்கக்கூடியது.

லோட்டஸ் வாஷர்:—சோப் என்பது இந்தியாமுழுதும் ஒவ்வொரு வீடுகளிலும் துணி துவைத்துக்கொள்வதற்காகவும் தேகத்தை சுத்தி செய்துகொள்வதற்காகவும், ரொம்பவும் உபயோகப்படக்கூடியது.

லோட்டஸ் சோப்:—என்பது மருந்து மூலியமாகச் செய்யப்பட்டதல்ல. எதற்காக சகலவித கொழுப்பு மூலானதுகள் கலந்த சோப்புகளை உபயோகிக்கிறதினால் தேகத்திற்கு வியாதிகள் சம்பவிக்கும்.

இது சஞ்சீவி கிழங்கு மூலிகைகளால் செய்ததே தவிர மாமிஸங்களால் செய்யப்பட்டதல்ல இதை ஒரு தடவை வாங்கி உபயோகிப்பீராகில் இதன் குணம் தெரியவரும்.

இந்த சோப்பை எல்லோரும் உபயோகப்படுத்தும்படி சுலப விலைக்கு விற்கப்படுகிறது. பம்பாயில் விற்கிற விலை பிரகாரம் இவ்விடத்திலும் விற்கப்படும். வியாபாரிகளுக்கு நல்ல கமிஷன்களும் கொடுக்கப்படும். மற்ற விஷயங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

மானேஜர்,

எம்பிரஸ் ஆப் இந்தியா டைரி கம்பெனி,

30, ஏகாம்பரீஸ்வரர் அக்கிரஹாரம் வீதி, மதராஸ்.

தர்மாஸ் தாதுவிர்த்தி சர்பத்து.

DURMA'S NERVE TONIC.

இந்த திவ்ய தாதுவிர்த்தி சர்பத்தானது இறப்பைப் இரத்தாசயம் முதலான உள்ளுருப்புகளுக்கு வலுவை தரக்கூடிய வேர், வித்து இலை சுத்த மூலிகை வர்க்கங்களைக்கொண்டு சாஸ்திர யுக்தமாய் பாடுபடுத்தியுளது. இதன் முக்கியகுணம் மேகரோகங்களை யகற்றி சீரணசக்தியை யுண்டுபண்ணி வாத பித்த சிலேற்பன தோஷங்களை நீக்கி ரத்தசுத்தியும் நாடிகளுக்கு வலுவையு முண்டாக்குகிறது, வாங்கியுபயோகிப்பவர்களே இதின்குணத்தை அறியலாம்.

10 பலம் அடங்கிய புட்டி	2	0	0
ஒரேதடவையில் 6-புட்டிவாங்கினால்	10	0	0

தபால் சிலவு பிரத்தியேகம்.

பி. தர்மா அண்டு கம்பெனி,

சிந்தாதிரிப்பேட்டை

மதிராஸ், S. C.

விலை குறைக்கப்பட்டிருக்கிறது

இதுவே ஸமயம்

அருமையான படங்களடங்கிய புத்தகம் 10" × 8" அளவுள்ளது.

விலை தபால்கூலியுள்பட ரூ 1-0-0 தான்.

இப்புத்தகத்தில் இந்தியாவில் அரசாண்டவரும் கீர்த்திபெற்ற அரசர்களின்படமும், நம்முடைய மாக்ஷிமைதங்கிய சக்கரவர்த்தி அவரது குடும்பத்தார் படமும், ராஜப் பிரதிநிதி யுத்ததளகர்த்தர், ஜப்பான் சக்கரவர்தி, ஜர்மனி அரசர், ருஷிய சக்கரவர்த்திப் படங்களும், கல்கத்தா, பம்பாய் இடங்களிலுள்ள அற்புதகாக்ஷிகளும், கோவில்கள் மஸூதிகள் படங்களும் 55 கொண்டது. மனதைக் கவரக்கூடியவண்ணம் தெளிவாய் அச்சிடப்பட்டிருக்கிறது ஏககாலத்தில் 3 புத்தகம் வாங்குவோர்க்கு ரூ 2-8-0 க்கு அடுப்பப்படும். வேண்டுவோர் உடனே எழுதிக் கொள்ளவும்.

உயர்ந்த பல தினிஸூஸெண்டுகளும் கிடைக்கும். சிறிய பாட்டில் 1க்கு 4 அணா. ஒரு டஜன் ரூ 2-8-0. தபால்கூலி வேறு.

DASS & Co.,

Beniatola street,

Hatkhola, Calcutta.